REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஒக்டோபர் 12 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY தினகரன்

வரு. 92 இல. 244 | Saturday 12, October, 2024 | 12 பக்கங்கள் | 50/-


அநுராதபுரம் மாவட்டத்தின்

## முன்னாள் எம்.பி. ஏக்கநாயக்க நேற்று காலமானார்



அநுராதபுரம் மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.பி.பீ.ஏக்கநாயக்க நேற்று காலமானார். வீட்டில் அவரது குளியலறையில்

06

# அடுத்த சில தினங்களுக்கு அதிக மழை




(படம்: பண்டாரகம பிமல் ஜயசிங்க)

நாட்டை சூழவுள்ள வளிமண்டலத்தில் அதிகரித்து வரும் தளம்பல் காரணமாக தற்போது பெய்து வரும் கடும் மழையுடனான காலநிலை தொடருமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 200 மில்லிமீற்றருக்கும் அதிகமான கடும் மழை பெய்யக் கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் (10) காலை 8.30 மணி முதல் நேற்று (11) அதிகாலை 2.30 மணிவரையான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்தின் ஹன்வெல்ல பிரதேசத்தில் அதிகூடிய 196.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியது.

தொடரும் சீரற்ற வானிலை காரணமாக களு மற்றும் வளவை கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. எஹலியகொடை, இரத்தினபுரி, இறக்குவானை, பெல்மதுளை பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன் புவாக்பிட்டிய பகுதியிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கொழும்பு – அவிசாவளை பிரதான வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி முதல் ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகம் மணிக்கு 60 முதல் 70 கிலோ மீற்றர்வரை அதிகரித்து வீசக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கம்பஹா திவுலபிட்டிய பிரதேசத்தில் 173.5 மில்லிமீற்றர் மழையும் களுத்துறை வொகன் தோட்டப் பகுதியில் 163.5 மில்லிமீற்றர் மழையும் பதிவாகியுள்ளது.

கொழும்பிலிருந்து காலி மற்றும் மாத்தறையூடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பகுதிகள் கொந்தளிப்பாக காணப்படும். எனவே மறு அறிவித்தல்வரை கடற்றொழிலில் ஈடுபட வேண்டாமென கடற்றொழிலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் 09 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

காலி, களுத்துறை, கேகாலை மாவட்டங்களுக்கு 02ஆம் கட்டத்தின் கீழ் எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும் பதுளை, கொழும்பு, கம்பஹா, மாத்தறை, நுவரெலியா, இரத்தினபுரி மாவட்டங்களுக்கு 01ஆம் கட்டத்தின் கீழ் எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

06

## ஓய்வூதியக்காரர்களுக்கு அடுத்த வாரம் முதல் ரூ. 3,000 மாதாந்த கொடுப்பனவு

அனைத்து ஓய்வூதியக்காரர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக 3,000 ரூபாவை அடுத்த வாரம் முதல் வழங்குமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இடைக்கால கொடுப்பனவான 3,000 ரூபாவை ஒக்டோபர் மாத ஓய்வூதியத்துடன் சேர்க்கப்படாமை தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி, அதே தொகையை அடுத்த வாரத்துக்குள் ஓய்வூதியக்காரர்களின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் நிதி அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் (10) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அனைத்து ஓய்வூதியக்காரர்களுக்கும் மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக 3,000 ரூபா வழங்குவதற்கு 24/08/2024 திகதியிட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2024 வெளியிடப்பட்ட போதிலும், அதற்கான நிதி எதுவும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, இதற்கான நிதியை வழங்குமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவித்தார்.

2024 ஒக்டோபர் மாத ஓய்வூதியத்துடன் இடைக்கால கொடுப்பனவான 3,000 ரூபா கிடைக்காததால் ஓய்வூதியம் பெறுவோர் எதிர்கொள்ளும் சிரமங்களையும் அவர்களின் கோரிக்கையையும் கருத்தில் கொண்டு, அரசின் நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் இம்மாதம் முதல் இந்த தொகையை வழங்க இதன்போது ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

ஒக்டோபர் மாதத்துக்கான ஓய்வூதியம் ஏற்கனவே ஓய்வூதியக்காரர்களின் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதால், ஒக்டோபர் மாதத்துக்கான 3,000 ரூபா கொடுப்பனவை அடுத்த வாரத்துக்குள் அவர்களது கணக்கில் வைப்பிலிடுமாறும்

06

## வடக்கு அதிவேக ரயில் சேவை சிறிதுகாலம் குறைந்த வேகத்தில்

### 22ஆம் திகதி மீண்டும் சேவையை ஆரம்பிக்க தீர்மானம்



மணிக்கு நூறு கிலோ மீற்றர் வேகத்தில் இயங்கும் நோக்கில் நவீனமயமாக்கப்பட்ட வடக்கு ரயில் பாதையின் மஹவ முதல் அநுராதபுரம் வரையிலான பகுதி முழுமையடையாத காரணத்தால், அந்தப் பகுதி ரயில்களின் வேகத்தை மணிக்கு 40 கிலோ மீற்றருக்கும் குறைவாக இயக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே பொது முகாமையாளர் எஸ்.எஸ். முதலி மற்றும் புகையிரத சாரதிகள், கட்டுப்பாட்டாளர்கள், நிலைய அதிபர்கள் உள்ளிட்ட ரயில்வே தொழிற்சங்க பிரதிநிதிகள் தலைமையில் ரயில்வே தலைமையகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த ரயில் பாதையை வரும் 22ஆம் திகதி திறக்கவும், முழுமையடையாத பழுதுகளை சரி செய்ய ஆறு மாதங்களுக்கு குறைந்தபட்ச வேகத்தில் ரயிலை இயக்கவும் பொது முகாமையாளர் அறிவுறுத்தினார்.

இதன் காரணமாக 64 கிலோமீற்றர் தூரத்தை ஒரு மணிநேரத்தில் கடக்கும் முயற்சி இரண்டரை மணிநேரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

3,000 கோடி ரூபா செலவில் மஹவ முதல் அநுராதபுரம் வரையான பகுதியின் நிர்மாணப்பணிகள் இந்திய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டன. எனினும் ஏற்பட்ட தாமதம் காரணமாக அந்த நிறுவனத்திடமிருந்து ரயில் பாதையை ரயில்வே திணைக்களம் உத்தியோகபூர்வமாக கையகப்படுத்தியுள்ளது.

## உலக உணவுத்திட்டம் இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கும்



இலங்கைக்கு உலக உணவுத் திட்டம் தொடர்ந்தும் ஆதரவளிக்குமென உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகள் குழுவினர் ஜனாதிபதியின் செயலாளரிடம் உறுதியளித்துள்ளனர்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் உலக உணவுத் திட்டத்தின் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று (11) ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தனர்.

உலக உணவுத் திட்டத்தினூடாக இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கு பிரதிநிதிகள் இதன்போது இணக்கம் தெரிவித்தனர்.

இலங்கையில் உணவு நெருக்கடி நிலைமை தற்போது குறைவாக உள்ள போதிலும், தேவை ஏற்படும் போது புதிய வேலைத்திட்டங்கள் மூலம் இலங்கைக்கு ஆதரவளிக்க உலக உணவுத் திட்டத்தின் தலைவர்கள் ஜனாதிபதியின் செயலாளரிடம் விருப்பம் தெரிவித்தனர்.

உலக உணவுத் திட்டத்தின் உள்ளூர் பணிப்பாளர் அப்துல் ரஹீம் சித்திக், அரசாங்க பங்காளித்துவ அதிகாரி முஸ்தபா நிஹ்மத், உலக உணவுத் திட்டத்தின் பிரதி வதிவிடப் பிரதிநிதி ஜெர்ட் ரெபெல்லோ, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ரோஷான் கமகே ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மதுபானசாலை 'பெர்மிட்' விவகாரம்

## யாழ். வேட்பாளர்கள், முன்னாள் எம்.பிக்களுக்கு காசிலிங்கம் சவால்



எவருக்கேனும் மதுபானசாலை அனுமதி பெற்றுக்கொடுக்கவில்லையென வெளிப்படையாக வாக்குமூலம் வழங்குமாறு பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன யாழ். மாவட்ட வேட்பாளர் கீத்நாத் காசிலிங்கம் சவால் விடுத்துள்ளார்.

நேற்று அவர் பதிவிட்டுள்ள சமூக வலைத்தள பதிவிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். பதிவில் மேலும் தெரிவித்துள்ள அவர், "நான் என்னுடைய வேட்புமனுவை தாக்கல் செய்துவிட்டேன். நான் எனக்கோ என்னுடைய குடும்பத்துக்கோ, உறவினர்களுக்கோ நண்பர்களுக்கோ அல்லது எனக்கு தெரிந்த எவருக்கேனும் மதுபானசாலை அனுமதிப்பத்திரத்தை கோரவோ அல்லது மத்தியஸ்தம் பண்ணவோ இல்லையென்பதை உறுதிப்படுத்தி வெளிப்படையாக ஒரு வாக்குமூலத்தை வழங்குகிறேன்.

யாழ் மாவட்டத்தின் சக வேட்பாளர்கள் குறிப்பாக பழைய பாராளுமன்ற உறுப்பினர்களும் அதையே செய்ய வேண்டுமென நான் சவால் விடுகிறேன்.

அண்மைய மாதங்களில் வடக்கில் பல மதுபானக்கடைகள்

06

## தமிழ் தேசியத்தை அழிக்க விருப்பமில்லை

### தமிழரசு கட்சியிலிருந்து விலகிய K.V. தவராசா தெரிவிப்பு



தமிழரசுக் கட்சியிலிருந்து ஒரு சிலரின் நன்மைக்காக தமிழ் தேசியத்தை அழிப்பதை விரும்பாததன் காரணமாக தமிழரசுக் கட்சியிலிருந்து விலகி புதிய ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பை உருவாக்கினோமென தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

ஜனநாயக தமிழரசுக் கூட்டமைப்பை உருவாக்கியதன் நோக்கம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் ஆணையிலிருந்து விலகி ஒரு சிலரின் ஏதேச்சை அதிகாரங்களுடன் செயல்பட்டு வரும் நிலையில் அந்தக் கட்சியிலிருந்து முதலாவதாக வெளியேறியவன் நான். நான் வெளியேறியமைக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன

06

## வேட்புமனுவில் ஒப்பமிட்ட தமிதாவின் பெயர் நீக்கம்

### ஏமாற்றத்துடன் வெளியேறல்



ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடுவாரென எதிர்பார்க்கப்பட்ட பிரபல நடிகை தமிதா அபேரத்னவின் பெயர் வேட்பாளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

நடிகை தமிதா அபேரத்ன பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிட கடந்த செவ்வாய்க்கிழமை வேட்புமனுவில் கையொப்பமிட்டிருந்தார். வேட்புமனுவை தாக்கல் செய்ய நேற்று சென்றவேளை வேட்பாளர் பட்டியலில் அவருடைய பெயர் நீக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து அவர் ஏமாற்றத்துடன் வெளியேறினார்.

தமிதா அபேரத்ன, ஐக்கிய மக்கள் சக்தியின் தீவிர ஆதரவாளராகவும் குரல் கொடுப்பவராகவும் இருந்து வருபவர். இரத்தினபுரி

06

## காஸாவில் பாடசாலை மீது இஸ்ரேல் தாக்குதல்

### 28 பேர் பலி; 50 பேர்வரை காயம்




காஸாவிலுள்ள பாடசாலையொன்றின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான் வழித் தாக்குதலில் 28 பேர் கொல்லப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய காஸா பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்கியிருந்த பாடசாலையொன்றின் மீதே இஸ்ரேல் இவ்வாறு வான் வழித் தாக்குதல் நடத்தியுள்ளதாக பலஸ்தீன செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. தாக்குதலில் 50 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# ஜனாதிபதி செய்திகள்

## கடற்படை பிரிவின் மனிதவள பயிற்சிக்கு அமெரிக்கா ஆதரவு



கடற்படை பிரிவின் மனிதவள பயிற்சிக்கு அமெரிக்காவின் ஆதரவு தொடர்ந்தும் இலங்கைக்கு வழங்கப்படுமென்று அமெரிக்க பசுபிக் கடற்படையின் கட்டளை அதிகாரி அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் உறுதியளித்துள்ளார்.

அமெரிக்க பசுபிக் கடற்படையின் கட்டளை அதிகாரி, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ள போதே இதனைத் இந்த உறுதியை வழங்கியுள்ளார்.

இந்துசமுத்திரத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பாதுகாப்பு சவால்களுக்கு முகங்கொடுத்தல், கடல்சார் பிராந்தியங்கள் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்துவது, அனர்த்தங்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துவது தொடர்பாக இதன் போது அவர்கள் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாதம் போன்ற சர்வதேச அச்சுறுத்தல்களுக்கு எதிராக போராடுவதில் இலங்கைக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ள அட்மிரல் கோஹ்லர், போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கும் பாராட்டியுள்ளார்.

## பாதுகாப்புத்துறைக்கு பாகிஸ்தான் ஆதரவு



பாதுகாப்புத்துறையில் பாகிஸ்தானின் ஆதரவு இலங்கைக்கு வழங்கப்படுமென்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) பஹீம் உல் அஸீஸ் ஹி (*Major General (Retd) Faheem Ul Aziz HI (M)*) உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்து உரையாடிய போதே இந்த உறுதியை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு வாழ்த்தை அவர் தெரிவித்துள்ளதுடன், பாகிஸ்தான் ஜனாதிபதி அஸீப் அலி சர்தாரியின் வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் அவர் கையளித்துள்ளார். இதன்போது பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர், இலங்கையுடனான உறவை வலுப்படுத்துவதற்கு பாகிஸ்தானின் அர்ப்பணிப்பையும் வலியுறுத்தியுள்ளதுடன், இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான நீண்டகால உறவையும் நினைவுகூர்ந்துள்ளார்.

## ஜனாதிபதி அநுர குமாரவுக்கு ஜேர்மன் வாழ்த்து



ஜேர்மனிக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவையும் பரஸ்பர நலன்களின் அடிப்படையில் அந்த ஒத்துழைப்பை மேலும் பேணுவதற்கு ஜேர்மனி கொண்டுள்ள அக்கறையை தூதுவர் நியூமன் வலியுறுத்தியுள்ளார்.

மனித வள அபிவிருத்தியில் ஜேர்மனியின் 70 வருட அனுபவத்தை வலியுறுத்திய தூதுவர், இலங்கையில் மனித வள அபிவிருத்தியை வலுப்படுத்த தனது ஆதரவை வழங்குவதாகவும் உறுதியளித்தார். இலங்கையின் தொழில்நுட்பக் கல்வித் துறையில் முக்கிய பங்காற்றுகின்ற கட்டுபெத்த, கிளிநொச்சி ஆகிய இரண்டு ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிகளின் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்துவதற்கு ஜேர்மன் உதவி வழங்கப்படுமெனவும் தூதுவர் குறிப்பிட்டார். இலங்கையில் அரச சேவையின் வினைத்திறனை அதிகரிக்க ஜேர்மனி ஆதரவு வழங்க தயாராக இருப்பதாக தூதுவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் பெலிக்ஸ் நியூமன் (*Felix Neumann*) நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் ஜனாதிபதி ஓலாஃப் ஸ்கொல்ஸின் வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் வழங்கி வைத்தார்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நிரந்தர பங்காளியாக ஜேர்மனி உறுதி பூண்டுள்ளதாக தூதுவர் பெலிக்ஸ் நியூமன் தெரிவித்தார்.

## ஜனாதிபதி அநுர குமாரவுக்கு தாய்லாந்து மன்னர் வாழ்த்து



இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் பைடூன் மகபன்னபொன் (*Paitoon Mahapannaporn*) நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.


கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதிக்கு தனதும் தாய்லாந்து அரசாங்கத்தினதும் வாழ்த்தை தெரிவித்துள்ள தாய்லாந்து தூதுவர், தாய்லாந்து மன்னர் வஜிரலோங்கொன் அனுப்பிய வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியின் ஆட்சிக்கு தனது பாராட்டு தெரிவித்துள்ள தாய்லாந்து தூதுவர், புதிய அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை, எதிர்பார்ப்புகளை நனவாக்குவதற்கு தாய்லாந்து அரசாங்கம் ஆதரவளிக்குமென்றார்.

இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் (FTA) நன்மைகள் தொடர்பாகவும் தாய்லாந்து தூதுவர் விளக்கமளித்துள்ளதுடன், அது பரஸ்பர பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் தாய்லாந்து முதலீட்டை ஊக்குவிப்பதற்காக குறிப்பாக உள்ளூர் பழங்கள், பொருட்களை பதப்படுத்துதல், ஏற்றுமதி செய்வது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

## உத்தியோகபூர்வ விஜயம் செய்ய ஜனாதிபதிக்கு துருக்கி அழைப்பு



துருக்கி மற்றும் இலங்கைக்கான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் அடையாளமாக துருக்கிக்கான உத்தியோகபூர்வ விஜயத்தில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு துருக்கி குடியரசின் தூதுவர் செமி லுதுபி துர்குட் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை துருக்கி குடியரசின் தூதுவர் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு தனது வாழ்த்தையும் தெரிவித்துள்ளார். இதன்போது துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்டோகன் மற்றும் துருக்கி மக்களின் வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதியிடம் அவர் கையளித்துள்ளார்.

## ஜனாதிபதி அநுர குமாரவுடன் சவுதி அரேபிய தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் நசார் அல்தசம் அல்கஹ்தானி (*Khalid Hamoud Nasser Aldasam Alkahtani*) நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற அநுர குமார திசாநாயக்கவுக்கான சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸின் வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதியிடம் தூதுவர் அல்கஹ்தானி கையளித்தார்.

பிராந்தியத்தின் தற்போதைய நிலைமை, சவுதிக்கும் இலங்கைக்கும் இடையில் நிலவும் நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு, சவுதிக்கான இலங்கையின் தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பது, இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக அவர்கள் இருவரும் கலந்துரையாடியதுடன், இலங்கையின் நீண்டகால ஆதரவு மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கு தூதுவர் அல்கதானி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கான தேசிய கொள்கையை வகுக்க சவுதி தூதுவர் ஊக்குவித்துள்ளார்.

## பொருளாதார வளர்ச்சிக்கு சுவிட்சர்லாந்து ஆதரவு



இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் கலாநிதி சிறி வோல்ட் (*Siri Walt*) நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதன்போது சுவிட்சர்லாந்து அரசாங்கம் மற்றும் அந்நாட்டு மக்களின் வாழ்த்தையும் ஜனாதிபதிக்கு அவர் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது செயற்படும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தினூடாக சுவிட்சர்லாந்து இலங்கைக்கு ஆதரவளிக்க உறுதி பூண்டுள்ளதாக உறுதிப்படுத்திய தூதுவர், ஊழலுக்கு எதிரான ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் முயற்சிகளுக்கு சுவிட்சர்லாந்து ஆதரவளிக்க தயாராக இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சுற்றுலாத்துறையில் சுவிட்சர்லாந்தின் நிபுணத்துவத்தையும் எடுத்துரைத்த அவர், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் அந்த துறைகளில் இலங்கைக்கு ஆதரவை வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசியலமைப்பு மறுசீரமைப்புகள் மற்றும் தொழிலாளர் இடம்பெயர்வு ஆகிய பகுதிகள் குறித்து இதன்போது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டதுடன், அந்த துறைகளில் இலங்கையின் திறன்களை மேலும் மேம்படுத்துவதற்கு சுவிட்சர்லாந்து ஆதரவை வழங்கும் என்று தூதுவர் சிறி வோல்ட் உறுதியளித்தார்.

## வரலாற்று ரீதியான உறவுகளை வலுப்படுத்த வியட்நாம் உறுதியளிப்பு



இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான பௌத்த, கலாசார உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவும் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் டிரின் தி டெம்மும் (*Trinh Thi Tam*) கவனம் செலுத்தியுள்ளனர்.

இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் டிரின் தி டெம் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன், புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதற்காக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு வியட்நாம் அரச தலைவர் மற்றும் அரசாங்கத்தினது வாழ்த்தை தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்தி முன்னோக்கிச் செல்வதற்கு தனது சாதகமான கருத்துகளையும் அவர் வெளிப்படுத்தினார்.

நேரடி வெளிநாட்டு முதலீடு (FDI) மற்றும் வர்த்தகத்துறையில் வியட்நாம் அடைந்துள்ள வெற்றிகள், இரு நாடுகளுக்கும் இடையிலான நேரடி விமான சேவைகளை மேம்படுத்துவது, இலங்கையை வியட்நாம் சுற்றுலாப் பயணிகளின் முன்னணித் தளமாக மாற்றுவதன் மூலம் இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான உறவுகளை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டது.

## ஜனாதிபதி அநுரவுக்கு பங்களாதேஷ் வாழ்த்து



இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் அந்தலிப் எலியாஸ் (*Andalib Elias*) நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு உயர்ஸ்தானிகர் எலியாஸ் வாழ்த்து தெரிவித்ததுடன், பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கத்தின் தலைவரான முஹம்மத் யூனுஸின் வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான தற்போதைய நிலைமை, பங்களாதேஷில் இலங்கையின் முதலீடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அவர்கள் இருவரும் கலந்துரையாடினர்.

## சர்வதேச பிரச்சினைகளில் இலங்கை பின்பற்றிய நடவடிக்கைக்கு பலஸ்தீனம் நன்றி



பலஸ்தீனம் எதிர்நோக்கிய சர்வதேச பிரச்சினைகளில் இலங்கை பின்பற்றிய நிலையான நடவடிக்கைகளுக்காக தனது நன்றியை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் ஹிஷாம் அபு தாஹா (*Hisham Abu Taha*) தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் ஹிஷாம் அபு தாஹா (*Hisham Abu Taha*) நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன், ஜனாதிபதிக்கு தனது வாழ்த்தையும் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனத்துக்கு இலங்கை வழங்கும் நீண்டகால ஆதரவை பாராட்டிய தூதுவர், எதிர்காலத்திலும் இலங்கையின் நட்புறவையும் ஒத்துழைப்பையும் தொடர்ந்தும் பேண பலஸ்தீனம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன மக்கள் எதிர்நோக்கும் விசா பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ள தூதுவர் அபுதாஹா, இரு நாடுகளுக்கும் இடையிலான மனிதவள தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்த கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கந்தளாய் சீனி தொழிற்சாலைக்கான 11,000 ஏக்கர் காணியை குறுகியகால செய்கைக்கு வழங்க பணிப்பு

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை



கந்தளாய் சீனி தொழிற்சாலைக்கு சொந்தமான 11,000 ஏக்கர் காணியை குறுகியகால பயிர்ச் செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய ஐந்து ஏக்கரை விட குறைவான காணி இவ்வாறு வழங்கப்படவுள்ளதுடன், அதற்கென ஒழுங்கான பொறிமுறையை தயாரிக்குமாறு ம் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் அதிகாரிகளை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்த போதே ஜனாதிபதி இப்பணிப்புரையை விடுத்துள்ளார். விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் செயலாளர் எம். பி.என்.எம். விக்ரமசிங்க, காணி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஹேமசிறி லியனகே உள்ளிட்டோர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## ஜனாதிபதியின் புகைப்படங்கள், வாழ்த்து செய்திகளை வெளியிட முன் ஜனாதிபதி அலுவலகத்தில் அனுமதி பெறவும்

### அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

ஜனாதிபதியின் புகைப்படங்கள் மற்றும் வாழ்த்துச் செய்திகளை வெளியிடுவதற்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தின் எழுத்து மூல அனுமதியை அனைத்து அரச நிறுவனங்களும் பெறுமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க அறிவுறுத்தியுள்ளார். அரச நிதியை பெற்று மேற்கொள்ளப்படும் பணிகளை ஏற்பாடு செய்யும் போது அரசாங்கத்தின் கொள்கை மற்றும் தொலைநோக்கு பார்வைக்கு அமைவாக செயற்படுவது அவசியமானதெனவும் அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துள்ளார்.

***ஜனாதிபதி ஊடகப் பிரிவு***

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஒக்டோபர் 12 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் புரட்டாதி 26
ராகுகாலம் : காலை : 9.02 - 10.32வரை
சுபநேரம் : மாலை : 3.02 - 04.32வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



இணைய குற்ற மையங்களிலுள்ள

# இலங்கையரை விடுவிக்க உதவுமாறு மியன்மார் அரசிடம் பிரதமர் கோரிக்கை

மியான்மாரின் மியாவாடி பிராந்தியத்தில் இணைய குற்ற மையங்களில் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலதிக இலங்கையரை மீட்பதற்கு தாய்லாந்து அரசாங்கத்தின் உதவியை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கோரியுள்ளார்.

மியன்மார் அரசாங்கம் மற்றும் புலம் பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM) மூலம் இதனை சாத்தியமாக்கித் தருமாறும் பிரதமர் ஹரிணி அமரசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

தாய்லாந்து தூதுவர் பைட்டூன் மஹாபன்னபோர்ன் (Paitoon Mahapannaporn) மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோருக்கிடையே (10) பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இணைய குற்ற மையங்களிலிருந்து 28 இலங்கையரை மீட்பதற்கு தாய்லாந்து அரசாங்கம் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்த பிரதமர், மேற்படி மையங்களில் மேலுமுள்ள 40 இலங்கையரை மீட்பதற்கு தொடர்ந்து ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தூதுவர் பைட்டூன் மஹாபன்னபோர்ன், இலங்கையின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்தவும், சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் விருப்பம் தெரிவித்தார். நவீன விவசாய தொழில்நுட்பப் பயன்பாடு, ருஹுனு பல்கலைக்கழகம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய பீடங்கள் இணைந்து அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் மற்றும் உணவு பதப்படுத்துதல் போன்ற ஆராய்ச்சித் துறைகளுக்கான ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.




இந்த கலந்துரையாடலில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, திருமதி ப்ராங்டிப் கோங்கிரிதிசுக்சகோர்ன் (Prangtip Kongridhisuksakorn) மற்றும் தோம் பெட்ச்புக்டெபோங் (Thom Petchpugdepong) உள்ளிட்ட தாய்லாந்து தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், பணிப்பாளர் நாயகம் சசிகலா பிரேமவர்தன மற்றும் வெளிவிவகார அமைச்சின் தென்கிழக்கு ஆசிய பிரிவின் பணிப்பாளர் திலினி இகலகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

தினகரன்
THINAKARAN
තිනකරන්

## 92 வருடங்களுக்கு முன் தினகரன்

இன்று 11ஒக்டோபர் 1932


அரசாங்க சபைக் கூட்டம்
மொத்தப் பென்ஷன் அனுமதிக்கப் பட்டதற்குக் காரணம் என்ன?
வரி உயர்விற்கு எதிர்ப்பு

### அரசாங்க சபைக் கூட்டம்

#### மொத்தப் பென்ஷன் அனுமதிக்கப் பட்டதற்குக் காரணம் என்ன?

**வரி உயர்விற்கு எதிர்ப்பு**

தற்கால ஆட்சி முறையைக்கண்டு பொக்கிஷக் காரியதரிசிகூட வெறுப்படைந்திருக்கிறாராம் மொத்தப் பென்ஷன் அளிக்க அங்கத்தினர்கள் சம்மதிக்காவிடின் அரசாங்க சபை, கவர்னரால் கலைக்கப்படலாம் என்று சில அங்கத்தினர்கள் அஞ்சி, வரவு செலவுத் திட்டத்திற்கு முன் நடந்த இரகசியக்கூட்டத்தில் மொத்தப் பென்ஷன் அளிப்பதற்குச் சம்மதித்தனர் என்று ஸ்ரீமான் ஜி. ஸி. எஸ். கொரியா இன்றைய அரசாங்க சபைக் கூட்டத்தில் வரவு செலவுத் திட்ட விவாதம் நடக்கும் பொழுது கூறினார்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

அரசியல்வாதிகளுக்கு வழங்கிய

# மதுபானசாலை அனுமதிகளின் விபரங்களை வெளியிடுங்கள்

## முன்னாள் எம்.பி. சுமந்திரன்



அரசியல்வாதிகளுக்கு கொடுக்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களின் விபரங்களை வெளியிடும்படி பல தடவைகள் நான் கேட்டிருக்கிறேன். தேசிய மக்கள் சக்தி அரசும் அந்த தகவலை வெளியிடாமல் இருப்பது சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றதென முன்னாள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்தெரிவித்தார்.

அரசியல் வழிக ளில் மதுபான சாலை அனும திப்பத்திரம் பெற்றவர்களின் பெயர்களை வெளியிடுமாறு அரசிடம் சுமந்திரன் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருந்தார்.

மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம் வழங்குவது இளைஞர்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு சமூகப் பிரச்சினை எனவும் அவ்வாறு அனுமதிப்பத்திரம் வழங்குவது வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டுமெனவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான உரிமங்களில் அரசியல் தொடர்புள்ள தனிநபர்களின் நிதி ஆதாயத்துக்காக வழங்கப்படுவதாகவும் சுமந்திரன் கூறினார்.

# அரச வாகனங்கள், சொத்துகளை துஷ்பிரயோகம் செய்வோர் குறித்து முறையிடலாம்



அரச வாகனங்கள், சொத்துகளை துஷ்பிரயோகம் செய்வோர் தொடர்பாக முறையிடலாமென பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அரச வாகனங்கள் அல்லது சொத்துகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் 1997 என்ற அவசர இலக்கத்தினூடாக அறிவிக்க முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தவிர அரச வாகனங்கள் அல்லது சொத்துகள் கடத்தப்படுகின்றமை தொடர்பிலும் அந்த இலக்கத்தினூடாக அறிவிக்க முடியுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரியான தகவல்களை வழங்குபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படுமெனவும் பதில் பொலிஸ் மாஅதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில்

# 4 உறுப்பினர்கள் தெரிவுக்கு 217 வேட்பாளர்கள் போட்டி

## 03 கட்சிகள், 03 சுயேச்சைக் குழுக்கள் நிராகரிப்பு

**திருகோணமலை தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் 04 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக களத்தில் 17 கட்சிகளின் சார்பில் 119 வேட்பாளர்களும், 14 சுயேட்சைக் குழுக்கள் சார்பில் 98 வேட்பாளர்களும் களமிறங்கியுள்ளனர்.

அத்துடன் இம்முறை கட்சிகள் பல பிரிந்து புதிய அணிகளாக போட்டியிடுவதால் மாவட்டத்தில் கடும் போட்டி நிலை உருவாகியுள்ளது.

20 கட்சிகள் வேட்புமனுவை கையளித்த போதும் அவற்றில் 03 கட்சிகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதுடன், 03 சுயேட்சைக் குழுக்களின் வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

நுவரெலியா மாவட்டத்தில்

# 8 உறுப்பினர்கள் தெரிவுக்கு 308 வேட்பாளர்கள் போட்டி

## 17 அரசியல் கட்சிகள், 11 சுயேச்சை குழுக்கள் களத்தில் 3 அரசியல் கட்சிகள், 4 சுயேச்சை குழுக்கள் நிராகரிப்பு

**நுவரெலியா தினகரன் நிருபர்**

நுவரெலியா மாவட்டத்தில் 08 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 17 அரசியல் கட்சிகளிலும் 11 சுயேச்சை குழுக்களிலும் 308 பேர் போட்டியிடுகின்றனர்.

அங்கீகரிக்கப்பட்ட 03 அரசியல் கட்சிகளும் 04 சுயேச்சை குழுக்களின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டன. இதன்படி ஈரோஸ் ஜனநாயக முன்னணி, அருணலு மக்கள் கட்சி, தேசிய மக்கள் கட்சி ஆகிய 03 கட்சிகளின் வேட்புமனுக்களே நிராகரிக்கப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் த.மு.கூ. உம் ஐக்கிய தேசிய கட்சியுடன் இ.தொ.காவும் தேசிய மக்கள் சக்தி பொதுஜன பெரமுன தனித்தும் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் திகா, ராதா, உதயாவும் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் ஜீவன், ரமேஸ் சக்தி மற்றும் திருமுருகன் ஆகியோரும் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர். இதற்கான வேட்புமனு நேற்று (11) வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பத்தாவது நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 17 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பிலும் 11 சுயேச்சை குழுக்கள் சார்பிலும் 308 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நுவரெலியா, மஸ்கெலியா (இரட்டை தொகுதி) வலப்பனை, கொத்மலை, ஹங்குரன்கெத்த ஆகிய நான்கு தொகுதிகளில் இருந்து 6,05,292 வாக்காளர்கள் 534 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

03 அரசியல் கட்சிகளும் 4 சுயேட்சை குழுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தலை கடந்த ஜனாதிபதி தேர்தலை போல அமைதியான தேர்தலாக நடத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்களின் முழுமையான ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் நுவரெலியா மாவட்ட செயலாளரும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான நந்தன கலபொட குறிப்பிடுகின்றார்.

# முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் வேட்புமனு நிராகரிப்பு

**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

2024 பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் சமர்பித்த வேட்புமனு மற்றும் மற்றொரு சுயேச்சைக் குழுவின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

கட்சியின் செயலாளர் கையொப்பமிடாதாலேயே முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் சமர்ப்பித்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் 25 அரசியல் கட்சிகளும் 35 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுவதற்காக நியமனப்பத்திர அங்கீகாரம் பெற்றுள்ளன.

இதன்படி நேற்று தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஐக்கிய தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் கங்கிரஸ், இலங்கை தமிழரசுக் கட்சி உட்பட பல அரசியல் கட்சிகளும் நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளன.

ஒல்லாந்தர் கோட்டையிலுள்ள மட்டக்களப்பு பழைய செயலக கட்டடத்திலேயே இந்த வேட்புமனு ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை இடம் பெற்றது.



# வன்னியில் 22 கட்சிகள், 25 சுயேச்சை குழுக்களின் வேட்புமனு ஏற்பு

**வவுனியா விசேட நிருபர்**



பாராளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு 22 கட்சிகள் மற்றும் 25 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், நான்கு குழுக்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான பீ.ஏ.சரத்சந்திர தெரிவித்தார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை கடந்த நான்காம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நேற்று மதியம் 12.00 மணியுடன் நிறைவுக்கு வந்திருந்தது.

அந்த வகையில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் அலுவலகத்தில் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

இம்முறை வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 24 அரசியல் கட்சிகளும் 27 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 51 குழுக்கள் வேட்புமனுக்களை கையளித்திருந்தன.

அவற்றில் இரண்டு அரசியல் கட்சிகள் மற்றும் இரண்டு சுயேச்சைக் குழுக்களினது விண்ணப்பங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத மற்றும் கையளிக்கப்படாத காரணத்தினால் தேர்தல் அலுவலகத்தால் நிராகரிக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக எங்கள் மக்கள் சக்தி மற்றும் சிறிரெலோ கட்சியின் ப.உதயராசா போட்டியிடவிருந்த ஜனநாயக தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்களே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன.

22 அரசியல் கட்சிகள் மற்றும் 25 சுயேச்சைக் குழுக்களின் விண்ணப்பங்களுமாக 47 ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை 2024ஆம் ஆண்டிற்கான பொதுத் தேர்தலில் 6 பாராளுமன்ற ஆசனங்களை பெற்றுக் கொள்வதற்காக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி தேர்தல் மாவட்டத்தில் 423 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளத்தில் 8 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 429 பேர் போட்டி

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

பொதுத் தேர்தலில புத்தளம் மாவட்டத்தில் இருந்து 8 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 429 பேர் போட்டியிடுவதாக புத்தள மாவட்ட செயலாளரும் புத்தளம் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான எச்.எம்.எஸ்.பி. ஹேரத் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் 24 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும், 15 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் ஒக்டோபர் 11ஆம் திகதிவரை மேற்கொள்ள தேர்தல் திணைக்களம் அவகாசம் அளித்திருந்தது. அதற்கமைய நேற்று நண்பகல் 12.00 மணிவரை புத்தளம் மாவட்ட செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.



அதன் பின்னர் நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணிவரை வேட்புமனுக்கள் தொடர்பில் ஆட்சேபனை செய்வதற்கான அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் 26 அரசியல் கட்சிகளும், 18 சுயேச்சைக் குழுக்களும் அடங்கலாக மொத்தம் 44 அரசியல் கட்சிகள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்திருந்தன.

இதன்போது, 2 அரசியல் கட்சிகள் மற்றும் 3 சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

06

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 26ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 08

### குறள் தரும் சிந்தனை



ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்

ஒரு குடம் பாலில் துளி நஞ்சுபோல், பேசும் சொற்களில் ஒரு சொல் தீய சொல்லாக இருந்து துன்பம் விளைவிக்குமானாலும், அந்தப் பேச்சில் உள்ள நல்ல சொற்கள் அனைத்தும் தீயனவாகிவிடும்.

## மாணவர்களைச் சீரழிக்கும் கைத்தொலைபேசி பாவனை!

கைத்தொலைபேசிப் பாவனை காரணமாக எமது நாட்டில் இளவயதினருக்கு அதிக பாதிப்புகள் ஏற்படுவதாக நிபுணர்களின் ஆய்வுகள் அடிக்கடி குறிப்பிடுகின்றன. குறிப்பாக மாணவர்கள் மத்தியில் கைத்தொலைபேசிப் பாவனையானது பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்துவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தகவல் அலட்சியப்படுத்தக் கூடியதல்ல. பெரியவர்கள் மத்தியில் பாதிப்பு ஏற்படுவதைப் பார்க்கிலும், இளவயதினர் மத்தியில் பாதிப்பு ஏற்படுவதென்பது பாரதூரமானதாகும். இளவயதினரின் பாதிப்பானது நாட்டின் எதிர்காலத்தையே சீரழித்து விடுவதாகும். எனவே கைத்தொலைபேசிப் பாவனையில் சாதக, பாதக அம்சங்கள் குறித்து ஆராய்ந்து அதுகுறித்த பயனுள்ள தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

இன்றைய உலகில் சிறுவர் பருவத்தைத் தாண்டியவர்களை எடுத்துக் கொள்வோமானால், கைத்தொலைபேசி இல்லாதவர்களைக் காண்பது அரிது. அதுவும் ஸ்மார்ட் தொலைபேசி எனப்படுகின்ற திறன்பேசியை வைத்திருக்காதவர்களைக் காண்பது முடியாத காரியமாகும். மாணவர்களில் பலர் க.பொ.த சாதாரணதர வகுப்புக்கு வருவதற்கு முன்னரே திறன்பேசியைப் பயன்படுத்தத் தொடங்கி விடுகின்றனர்.

தமது பிள்ளைகளின் நச்சரிப்புத் தாங்காமல் கைத்தொலைபேசியொன்றை வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் அதிகமானோரை நாம் இன்று காண்கின்றோம். அதன் பிறகு அந்தக் கைத்தொலைபேசியானது அந்த மாணவனுடன் இரண்டறக் கலந்து விடுகின்றது. அம்மாணவனின் கல்வி பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க, ஏனைய பலவழிகளில் இருந்து வருகின்ற பாதிப்புகள்தான் அநேகம்.

அறிவியல்துறையைப் பொறுத்தவரையில் திறன்பேசிகள் பலவிதமான நன்மைகளைத் தருகின்றன. ஆனால் இன்றைய நிலையில் பார்க்கின்ற போது, தீங்குகள்தான் அதிகம் என்பது புரிகின்றது. நம் அன்றாட அனுபவங்களே இவற்றை உறுதிப்படுத்துகின்றன. ஸ்மார்ட் தொலைபேசியின் வரவுக்குப் பிறகு மக்களின் ஏராளமான நேரம் விரயமாக்கப்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள் தங்களின் பொன்னான நேரத்தை தொலைபேசியில் உரையாடியும், குறுஞ்செய்திகள் அனுப்பியும் வீணாக்குகிறார்கள்.

கைத்தொலைபேசியை தமது பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுப்பதென்பது இன்று பெற்றோரின் கடமையாகி விட்டது. கைத்தொலைபேசியொன்றை வாங்கிக் கொடுக்காவிடின், தமது பிள்ளையின் வெறுப்பைச் சம்பாதிக்க வேண்டியேற்படுமென்று பெற்றோர் பலர் நினைக்கின்றனர். எனவே பெற்றோர் வேறு வழியின்றி தமது பிள்ளைகளுக்கு கைத்தொலைபேசியை வாங்கிக் கொடுக்கின்றனர்.

அவ்வாறு பெற்றோர் வாங்கிக் கொடுக்கின்ற ஸ்மார்ட் தொலைபேசியே மாணவர்கள் பலரின் எதிர்காலத்தைப் பாழாக்கி விடுகின்றது. கைத்தொலைபேசிக்கு அடிமையாகிப் போனதால் கல்வியைப் பாழாக்கி, ஒழுக்கமும் பாழாகிப் போன மாணவர்கள் பலர் உள்ளனர்.

அவசியமான பணிகளுக்கு கைத்தொலைபேசி பயன்படுத்தப்படுவதை விட, பொழுதுபோக்குக்கே இன்று அதிக நேரம் தொலைபேசியில் செலவாகின்றது. தொலைபேசியில் அதிகம் பேசப்பேச பணம் கரைகிறது. பல நாடுகளில் மாணவர்கள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும் என்னும் கோரிக்கை வலுவடைந்து வருகிறது. மாணவர்கள் தங்களின் நேரத்தையும், கவனத்தையும் தொலைபேசி மூலம் இழந்து வருகின்றனர். அது மட்டுமன்றி, தொலைபேசிப் பயன்பாடு மூளையின் நரம்புகளைப் பாதித்து, கவனம் செலுத்தும் ஆற்றலைக் குறைக்கிறது, நினைவாற்றலைப் பாதிக்கிறது என்பதையும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே, இளவயது மாணவர்கள் தொலைபேசியைப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

மது, போதைப்பொருள் போலவே தொலைபேசிப் பயன்பாடும் ஓர் அடிமைப் பழக்கமாக மாறிவருகிறது. இளைஞர்கள் தொலைபேசிக்கு அடிமையாகி விட்டனர் என்றும், அதனைப் பயன்படுத்தாமல் இருந்தால் பித்துப் பிடித்தவர் போலாகி விடுகின்றனர் என்றும் மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

பொது இடங்களில்கூட அருகே இருக்கும் சகமனிதர்களைப் பற்றித் துளியும் கவலைப்படாமல் தொலைபேசியில் நேரத்தைச் செலவிடுகின்றனர். வழிபாட்டுத் தலங்கள், கருத்தரங்குகள் போன்ற இடங்களிலும் கூட தொலைபேசியை அணைத்து விடுங்கள் என்று அறிவிப்புச் செய்யும் அவலநிலை காணப்படுகின்றது.

தொலைபேசியைப் பயன்படுத்திக் கொண்டே வாகனம் செலுத்துவதனால் விபத்துகள் நிகழ்கின்றன. ஆனாலும் இந்தப் பழக்கம் குறைந்தபாடாக இல்லை என்பதை அன்றாடம் நாம் பார்க்கிறோம்.

உயிர்காக்க, அவசரத் தேவைகளுக்கு, பயண நேரத்திற்கென கைத்தொலைபேசியின் நல்ல பயன்பாடுகள் பல இருந்தாலும்கூட, அதே தொலைபேசி பல தீய செயற்பாடுகளுக்கும் பயன்படுகிறது என்பது அச்சத்தைத் தருகிறது. பலவிதமான சமூகத் தீமைகளுக்கும் தொலைபேசியைப் பயன்படுத்தும் சமூக விரோதக் கும்பல்களும் உள்ளன. தொழில்நுட்பம் என்பது இருபுறமும் கூர்மையான கத்தி என்பதை நாம் மறந்து விடலாகாது.

editor.tkn@lakehouse.lk

# வெற்றியை கொண்டாடும் திருநாள் விஜயதசமி

## நவராத்திரி விழாவின் நிறைவையடுத்து, பத்தாவது நாளான இன்று அனுஷ்டிப்பு

நவராத்திரி விழாவின் நிறைவையடுத்து பத்தாவது நாள் விஜயதசமியாக இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. விஜயதசமி என்பது வெற்றியைக் கொண்டாடும் நாளாகும். இது தீமை அழிந்து, நன்மை உலகில் நிலைநாட்டப்படுவதைக் கொண்டாடும் திருநாளாகும்.

நவராத்திரி விழாவின் உச்ச நிகழ்வாக கொண்டாடப்படுவது சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி விழா ஆகியனவாகும். நவராத்திரி வழிபாட்டின் முழுமையான பலனையும் தரக்கூடிய நாட்கள்தான் இவை.

நவராத்திரியின் முதல் எட்டு நாட்கள் விரதம் இருந்து, அம்பிகையை அந்தந்த நாளுக்குரிய முறையில் வழிபட முடியாதவர்களும் கூட கடைசி இந்த இரண்டு நாட்களில் விரதம் இருந்து வழிபட்டால் அனைத்து நலன்களையும் பெற முடியும்.



நவராத்திரி விழா இந்த ஆண்டு ஒக்டோபர் 3 ஆம் திகதி தொடங்கி, ஒக்டோபர் 11 ஆம் திகதியான நேற்றுவரை கொண்டாடப்பட்டது. நவராத்திரியின் நிறைவு நாளும், ஒன்பதாவது நாளுமான ஒக்டோபர் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமையைத் தொடர்ந்து இன்று விஜயதசமி அனுஷ்டிக்கப்படுகின்றது.

நவராத்திரியின் கடைசி மூன்று நாட்களுமே ஞானத்தை வழங்குகின்ற கலைமகளாகிய சரஸ்வதிக்குரிய வழிபாட்டு நாட்களாக இருந்தாலும், நவராத்திரியின் ஒன்பதாவது நாள்தான் சரஸ்வதி பூஜையாக கொண்டாடப்படுகின்றது. அன்றைய தினமே ஆயுத பூஜையாகவும் கொண்டாடப்படுகிறது.

சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுதபூஜை ஆகிய இரண்டும் 11 ஆம் திகதியான நேற்று வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டன.

மகிஷாசுரனை வதம் செய்வதற்காக கடும் தவம் இருந்து, ஒவ்வொரு தெய்வங்களிடம் இருந்து அன்னை பராசக்தி ஒவ்வொரு விதமான சக்தி வாய்ந்த ஆயுதங்களைப் பெற்றாள். போரின் இறுதி நாளில், போர்க்களத்திற்கு புறப்படுவதற்கு தெய்வங்களிடம் இருந்து பெறப்பட்ட ஆயுதங்களை வைத்து, அன்னை பராசக்தி பூஜை செய்து வழிபடுகிறாள்.

தனக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்பதற்காக அன்னை பராசக்தி ஆயுதங்களை வைத்து வழிபட்ட இந்த நாளையே இந்துக்கள் ஆயுத பூஜையாக கொண்டாடுகின்றனர்.

நவராத்திரி ஒன்பது நாட்களைக் கொண்ட வழிநாட்டு விழாவாக இருந்தாலும் அதன் இறுதி நாளாக கருதுவது வளர்பிறை தசமி நாளைத்தான். அம்பிகை பத்தாவது நாளில் மகிஷனை போரில் வதம் செய்து வீழ்த்தி, வெற்றி வாகை சூடிய நாளையே விஜயதசமியாக நவராத்திரியின் பத்தாவது நாளில் கொண்டாடுகின்றனர். இது அம்பிகை மகிஷாசுரமர்த்தினியாக, மகிஷனை வதம் செய்த நாளாகவும், இராமாயணத்தின் இராமபிரான், இராவணனை போரில் வதம் செய்த நாளாகவும் கருதி இந்துக்கள் கொண்டாடுகின்றனர்.

இந்த ஆண்டு விஜயதசமி விழா ஒக்டோபர் 12 ஆம் திகதியான இன்று சனிக்கிழமை வருகிறது. இது புரட்டாசி கடைசி சனிக்கிழமையும் ஆகும். இந்த நாளில் புதிய தொழில்கள், கல்வி, கலைகள் சார்ந்த பணிகளைத் தொடங்குவது வழக்கம். குழந்தைகள் கல்வியை ஆரம்பிக்கும் வித்தியாரம்பம் நிகழ்வும் விஜயதசமி நாளில் நடத்தப்படுகிறது.

விஜயதசமி நாளில் குழந்தைகளுக்கு அரிசி, நெல் ஆகியவற்றில் முதல் எழுத்தை எழுத வைத்தால் அவர்கள் அன்னை பராசக்தியின் அருளால் மேலும் மேலும் கல்வியில் உயர்வார்கள் என்பது நம்பிக்கை. புதிய தொழில்கள், வியாபாரம் தொடங்குபவர்கள், புதிய சொத்துக்கள் வாங்க நினைப்பவர்கள் இந்த நாளில் தொடங்குவது வழக்கமாக உள்ளது.

வெற்றிக்குரிய விஜயதசமி நாளில் தொடங்கப்படும் காரியங்கள் அம்பிகையின் அருளால் வெற்றிகரமாக முடியும் என்பது ஐதீகம். வாழ்க்கையில் நாம் செய்யும் அல்லது தொடங்கும் தொழில்களில் வெற்றிகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக வழிபடக் கூடிய நாளே விஜயதசமி திருநாள் ஆகும்.

இது புரட்டாசி கடைசி சனிக்கிழமையுடன் இணைந்து விஜயதசமி வருவது மிகவும் விசேஷமானதாக கருதப்படுகிறது. இந்த நாளில் தொழில் நிறுவனங்களில், தொழில் செய்யும் பொருட்களை வைத்து தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து கொண்டாடுவார்கள். வீட்டில் இருக்கும் வாகனங்கள் ஆகியவற்றையும் சுத்தம் செய்து, அவற்றுக்கு சந்தனம், குங்குமம் தொட்டு வைத்து வழிபடும் வழக்கம் உள்ளது.

வித்யாரம்பம், விஜயதசமி பூஜை செய்வதற்கான நல்ல நேரம் வருமாறு:

காலை 06.30 முதல் 08.30 வரை, காலை 10.35 முதல் 01.20 வரை, மாலை 6 மணிக்கு மேல்

# 'இந்தியா வெளியேறு' என்று கூறிய மாலைதீவு ஜனாதிபதி, இன்று நட்புடன் புதுடில்லி சென்றது ஏன்?

நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு கடந்த திங்கட்கிழமை இந்தியா வந்து பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவர் மாலைதீவு அதிபராகப் பதவியேற்ற பிறகு முதன் முறையாக தற்போது அவர் இந்தியா வந்துள்ளார். சீனாவுடன் முய்சு நெருக்கம் காட்டுவதாக கூறப்பட்ட கருத்து, இந்தியாவிற்கும் மாலைதீவுக்கும் இடையிலான உறவுகளில் பல ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதற்கு வழிவகுத்தது.

முய்சுவின் இந்தப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதில் ஒரு புதிய அத்தியாயமாக இருக்கும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

"மாலத்தீவின் சமூக, பொருளாதார, மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சியில் இந்தியா முக்கிய பங்காற்றுகிறது" என்று பிரதமர் மோடியைச் சந்தித்த பிறகு முய்சு கூறினார்.

"மாலைதீவுக்கு உதவி தேவைப்படும் காலங்களில் இந்தியா எப்போதும் எங்களுடன் துணைநின்றுள்ளது" என்றும் அவர் கூறினார்.



பல ஆண்டுகளாக கொடுத்த உதவி மற்றும் ஒத்துழைப்புக்காக பிரதமர் மோடி, இந்திய அரசு மற்றும் இந்திய மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று முய்சு கூறினார்.

அந்நிய செலாவணிக் கையிருப்புப் பற்றாக்குறை மற்றும் பொருளாதார நெருக்கடியால் தவித்து வரும் மாலைதீவுக்கு இந்தப் பயணம் சாதகமாக இருக்கும், என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இரு நாடுகளுக்கும் இடையே பல இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. மாலைதீவுக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.3,350 கோடி) வரையிலான நாணயப் பரிமாற்றத்திற்கு இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது.

இது தவிர, 30 பில்லியன் இந்திய ரூபாய் வரையிலான (இந்திய மதிப்பில் சுமார் ரூ.2.5 இலட்சம் கோடி) நாணயப் பரிமாற்றத்திற்கும் இந்தியா ஒப்புக்கொண்டது. இந்த நாணயப் பரிமாற்றம் இரு நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தமாகும்.

வெளிநாட்டுச் சந்தையுடன் ஒப்பிடும்போது இத்தகைய கடன்களில் வட்டி வீதம் சற்றுக் குறைவாக இருக்கும்.

இந்தியாவிடம் இருந்து இந்தக் கடன் பெற்ற பிறகு, மாலைதீவின் அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரிக்கக் கூடும். சமீபத்திய அறிக்கையின்படி, மாலைதீவின் அந்நிய செலாவணி கையிருப்பானது, ஒன்றரை மாதத்திற்கு மட்டுமே போதுமானதாக இருப்பது தெரியவந்துள்ளது.

இந்தியாவுக்கும் மாலைதீவிற்கும் இடையிலான நாணயப் பரிமாற்றத்தைப் போலவே, 2021ஆம் ஆண்டில் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நாணய பரிமாற்றம் நடைபெற்றது.

அப்போது சீனா இலங்கைக்கு 10 பில்லியன் யுவான் (1.5 பில்லியன் அமெரிக்க டொலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.12,525 கோடி) கடனாக வழங்கியது. அந்தச் சமயம் இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியில் இருந்தது. இந்த நடவடிக்கையால் இலங்கை சீனாவை அதிகமாக சார்ந்திருப்பதாகப் பார்க்கப்பட்டது.

மாலைதீவு அதிபர் முய்சு சீனாவுடன் நெருக்கம் காட்டுபவராகப் பெயர் பெற்றவர். மாலைதீவில் இருந்து இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதாக உறுதியளித்து 'இந்தியா வெளியேறு' என்ற கொள்கையின் உதவி கொண்டு அவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார்.

மாலைதீவின் முன்னைய அரசாங்கங்கள் இந்தியாவிற்கு நெருக்கமாக இருந்த நிலையில், முய்சுவின் இந்தக் கொள்கை இதற்கு முற்றிலும் மாறாக இருந்தது.

சீனாவுடன் மாலைதீவின் உறவை மேம்படுத்த முய்சு விரும்பினார். இதற்கு முன்னர் இருந்த அரசாங்கங்கள் பின்பற்றிய பாரம்பரியக் கொள்கையை மாற்ற விரும்பினார்.

மாலைதீவின் இந்த நடவடிக்கைகளுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி லட்சத்தீவின் சுற்றுலாவை மேம்படுத்த விழைந்தார். முய்சு அதிபரான பிறகு, அவரது அமைச்சரவையின் இரண்டு அமைச்சர்கள், பிரதமர் மோடியைப் பற்றி தரக்குறைவான கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இதனால், மாலைதீவுக்கு எதிராக இந்தியாவில் கோபம் எழுந்தது.

கொவிட் தொற்றுக்குப் பிறகு, இந்திய மக்கள் அதிக எண்ணிக்கையில் மாலைதீவுக்குச் சுற்றுலா சென்றுவந்தனர். மாலைதீவின் நிலைப்பாட்டையடுத்து, இந்திய மக்கள் மாலைதீவுக்குச் சுற்றுலா செல்வதை புறக்கணிக்கத் தொடங்கினர்.

அதிபரான பிறகு, முய்சு மாலைதீவின் பாரம்பரியக் கொள்கைகளை உடைத்து, தனது முதல் வெளிநாட்டு அரசுமுறைப் பயணமாக இந்தியாவிற்கு வருவதற்குப் பதிலாக துருக்கி சென்றார். பின்னர் அவர் சீனாவிற்கும் சென்றார். அங்கு அவர் சீனாவுடன் வர்த்தக மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார்.

சீனாவிலிருந்து திரும்பிய பிறகு, முய்சு மாலைதீவில் இருக்கும் எல்லா இந்திய இராணுவ வீரர்களையும் வெளியேற்ற முடிவு செய்தார். முய்சுவின் இந்த முடிவை ஏற்று, இந்தியா தனது இராணுவ வீரர்களை மாலைதீவில் இருந்து திரும்பப் பெற்றது.

ஆனால் மிக விரைவாகவே முய்சுவின் செயற்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டது.

மோடி அரசுக்கு எதிராக கருத்துத் தெரிவித்த மாலைதீவு அமைச்சர்கள் பதவிநீக்கம் செய்யப்பட்டனர். மாலைதீவில் மோசமாகி வரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், முய்சு இந்தியாவைத் தனது 'நெருங்கிய நட்பு நாடு' என்று அழைத்து, இந்த நெருக்கடியைச் சீர்செய்ய உதவுமாறு வேண்டுகோள் விடுத்தார்.


ஜூன் மாதம் நடைபெற்ற பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்காக முய்சு இந்தியா வந்திருந்தார். இதற்குப் பிறகு, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரும் ஓகஸ்ட் மாதம் மாலைதீவுக்குச் சென்றார்.

முய்சு தற்போது இந்தியாவுடன் நட்பு பாராட்டும் அணுகுமுறையானது மாலைதீவின் பொருளாதார நெருக்கடியுடன் இணைத்துப் பேசப்படுகிறது. இந்தியச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்ததால் மாலைதீவிற்கு இழப்பு ஏற்பட்டு வருகிறது.

இந்தியா நம்பகமான நட்பு நாடு என்பதை மாலைதீவு இப்போது உணர்ந்துள்ளது. முய்சு பிற நட்பு நாடுகளிடம் இருந்து உதவி பெற முயன்றார், ஆனால் அதில் அவர் வெற்றிபெறவில்லை.

பிரதமர் மோடியைச் சந்தித்த பிறகு, மாலைதீவுக்கு அதிகமான இந்தியச் சுற்றுலாப் பயணிகளை வருகை தருமாறு முய்சு கேட்டுக் கொண்டார்.

முய்சுவின் இந்தியச் சுற்றுப்பயணமும், அவர் இந்தியா மீது நட்பு பாராட்டும் அணுகுமுறையும் அவர் சீனாவுடன் நெருக்கம் காட்டுவதில் இருந்து விலகிவிட்டார் என்று அர்த்தம் இல்லை. ஆனாலும் அவரது இந்தப் பயணம் இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்தியாவின் நிலையை வலுப்படுத்த உதவும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.



# இராணுவ வல்லமை கூடிய தேசம் இஸ்ரேலா, ஈரானா?

## அன்று நண்பர்களாகவிருந்த இருநாடுகளும், இன்று எதிரிகளாக மோதிக் கொள்ளும் விசித்திரம்!

இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல், மத்திய கிழக்குப் போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது. இருந்த போதிலும், இந்த இரண்டு நாடுகளும் நிரந்தர எதிரிகளாக வரலாற்றில் இருந்ததில்லை. இன்னும் சொல்லப்போனால், பொது எதிரிக்காக இரு நாடுகளும் கைகோர்த்த சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

இஸ்ரேல் - ஈரான் இடையே பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், மத்திய கிழக்குப் பகுதி எப்போதும் போல கொந்தளிப்பாகவே உள்ளது. பலரும் நினைப்பது போல இரு நாடுகளும் வரலாற்று எதிரிகள் அல்ல. பல காலம் நட்புடனும் இருந்துள்ளன.

மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு பாரிய மோதல் பற்றிய அச்சம் எழுந்துள்ளது. இந்நிலையில் இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய இரண்டு நாடுகளில், எந்த நாட்டின் இராணுவம் பலம் மிக்கது என்ற கேள்வியும் எழுகிறது.

இருநாட்டு இராணுவத்தின் தாக்கும் திறனை ஒப்பிட்டு, பல்வேறு அதிகாரபூர்வ மற்றும் இணையத்தில் கிடைக்கும் தகவல்களைப் பயன்படுத்தி இராணுவ வலிமை மதிப்பிடப்படுகிறது.



**அன்று நண்பன் இன்று பகைவன்:**

இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல், போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது என்றாலும், இந்த இரண்டு நாடுகளும் நிரந்தர எதிரிகளாக இருந்ததில்லை.

இன்னும் சொல்லப்போனால், பொதுஎதிரிக்காக இருவரும் கைகோர்த்த சம்பவமும் நிகழ்ந்துள்ளது. 1960களில், இஸ்ரேலும், ஈரானும் ஈராக்கிற்கு எதிராக இணைந்து செயல்பட்டன.

விரோதப் போக்கு கொண்ட அரபு ஆட்சிகளுக்கு எதிராக இஸ்ரேல் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கையில், ஈரான் அதன் கடைசி மன்னரான ஷா என அழைக்கப்படும் முகமது ரெசா பஹ்லவியின் ஆட்சியில் இருந்தது. ஈராக் பொதுஎதிரியாகவே, இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் மற்றும் ஈரானின் உளவு அமைப்பான சாவக் ஆகியவை மத்திய ஈராக்கிய ஆட்சிக்கு எதிராக குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கு ஊக்கமளிப்பதில் முக்கிய பங்காற்றின.

மேலும், இஸ்ரேல், ஈரான், துருக்கி ஆகிய நாடுகளை உள்ளடக்கிய முத்தரப்பு உளவு கூட்டணியை உருவாக்கின. ஷாவின் ஆட்சியின் இறுதிக்காலம் வரை இந்த உறவு அழுத்தமாக நீடித்தது.

**இஸ்ரேல் ஈரான் ஓர் ஒப்பீடு:**

ஈரான் இஸ்ரேலை விடப் பலமடங்கு பெரிய நாடு. அதன் மக்கள் தொகை சுமார் ஒன்பது கோடி. இது இஸ்ரேலின் மக்கள் தொகையான ஒரு கோடியைவிட பல மடங்கு அதிகமாகும்.

கடந்த 2023 ஆம் ஆண்டில் ஈரானின் பாதுகாப்பு பட்ஜெட் சுமார் 740 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. ஆனால் இஸ்ரேலின் பாதுகாப்பு பட்ஜெட் அதைவிட இருமடங்காக இருந்தது. அதாவது 1,900 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது.

இஸ்ரேலின் பாதுகாப்புச் செலவு, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது ஈரானைவிட இரட்டிப்பாகும்.

சமீபத்திய புள்ளி விபரங்களின்படி இஸ்ரேல் – ஈரான் இராணுவ பலம் ஒப்பீடுகளின்படி ஈரான், இஸ்ரேலை விட ஆறு மடங்கு அதிகமான இராணுவ வீரர்களைக் கொண்டுள்ளது. ஈரானிடம் 6 இலட்சம் இராணுவ வீரர்கள் உள்ளனர். இஸ்ரேலிடம் 1 இலட்சம் வீரர்கள் உள்ளனர்.

அத்துடன் இஸ்ரேலிடம் 3,501 தாங்கிகள், 64 கடற்படைப் போர்க் கப்பல்கள், 3,106 ஏவுகணைகள், 460 போர் விமானங்கள் ஹெலிகொப்டர்கள், 48 நில வான் ஏவுகணைகள் உள்ளன.

ஆயினும் ஈரானிடம் போரிடும் 1,613 தாங்கிகள், 261 கடற்படைப்

போர்க் கப்பல்கள், 1,491 ஏவுகணைகள் மட்டுமே உள்ளன. அத்துடன் ஈரான் 336 போர் விமானங்கள்ஹெலிகொப்டர்களையும், 279 நில வான் ஏவுகணைகளையும் வைத்துள்ளது.

**அணு ஆயுத பலம்:**

இஸ்ரேல் அதன் சொந்த அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் இதுபற்றி அந்நாடு தெளிவாக ஒருபோதும் கூறுவதில்லை.

ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக குற்றச்சாட்டுகள் இருந்தாலும், அந்நாடு அணு ஆயுதங்கள் உருவாக்குவதற்குத் தனது அணுசக்தித் திட்டத்தைப் பயன்படுத்த முயல்வதாக வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை எப்போதும் மறுக்கிறது.

இஸ்ரேல் சார்பான அமெரிக்காவின் நிலைப்பாடு ஒருபோதும் மாறுவதில்லை.

ஹிஸ்புல்லா நஸ்ரல்லா கொல்லப்பட்ட பிறகு அறிக்கை வெளியிட்ட இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "ஆயிரக்கணக்கான இஸ்ரேலிய மக்களையும், வெளிநாட்டவரையும் கொன்று குவித்ததற்குக் காரணமானவரை கொன்று கணக்கைத் தீர்த்து விட்டோம்" என்றார்.

இதற்கு அமெரிக்காவும் வக்காலத்து வாங்கியது.

லெபனானில் 1983 இல் ஹிஸ்புல்லா இயக்கத்தினரின் வெடிகுண்டுத் தாக்குதலில் சாதாரண பிரஜைகள் 63 பேர், அமெரிக்கக் கடற்படையினர் 241 பேர், பிரெஞ்சு படையினர் 58 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் ஈரானை எதிர்க்க, இஸ்ரேலுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அமெரிக்கஉறுதியாக வழங்கி வருகிறது.

லெபனான் பொதுவாக ஷியா முஸ்லிம் நாடாக அறியப்பட்டாலும், அங்கு ஷியா, சுனி முஸ்லிம்கள் ஏறக்குறைய சம அளவில்தான் உள்ளனர்.



அதிகாரபூர்வ கணக்கெடுப்பு அங்கு நடைபெறாவிட்டாலும், கடந்த 2022 ஆம் ஆண்டு வெளியிட்ட புள்ளிவிபரத்தின்படி சுனி முஸ்லிம்கள் 31.2 சதவீதம், ஷியா முஸ்லிம்கள் 32 சதவீதம் உள்ளனர் எனத் தெரியவருகிறது.

இது தவிர கிறிஸ்தவர்கள் 32.4 சதவீதம் உள்ளனர். இந்துக்கள், பௌத்தர்கள், யூதர்கள் சிறுபான்மையினராவர்.

நஸ்ரல்லா கொலையான பிறகு, சுனி முஸ்லிம்கள் தலைமையிலான பெரும்பாலான அரபு நாடுகள் அமைதி காத்தன. இஸ்ரேலுடனான உறவை சீர்படுத்துவதா அல்லது ஹஸ்புல்லாவை ஆதரிக்கும் ஈரானை எதிர்ப்பதா என்ற குழப்பம்தான் இதற்குக் காரணம்.

ஹிஸ்புல்லாவை 32 ஆண்டுகளாக வழி நடத்திய நஸ்ரல்லாவின் எதிரி நாடுகள் பட்டியலில் இஸ்ரேல் மற்றும் மேற்கத்திய நாடுகள் பல இருந்தன. இதனால்தான் மேற்கத்தேய நாடுகள், வளைகுடா அரபு நாடுகள், அரபு லீக் ஆகியவை ஹிஸ்புல்லாவை பயங்கரவாத அமைப்பு என அறிவித்திருந்தன.

சுனி முஸ்லிம் நாடான சவுதி அரேபியா, லெபனானில் நடக்கும் சம்பவங்கள் குறித்து கவலை தெரிவித்தாலும், நஸ்ரல்லா பற்றி எதுவுமே கூறவில்லை. இதேபோல்தான் சுனி முஸ்லிம் நாடுகளான கத்தார், பஹ்ரைன், ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளும் நஸ்ரல்லா கொலையானது குறித்து எதுவும் கூறவில்லை. ஏன் சில இடங்களில் கொண்டாடப்பட்டதாகவும் ஊடகங்களில் படங்களுடன் தகவல்கள் வெளியாகியிருந்தன.

2011 ஆம் ஆண்டில் ஷியா முஸ்லிம் இயக்கத்தை பஹ்ரைன் ஒடுக்கியது. இதற்குக் காரணம், பஹ்ரைன் ஷியா முஸ்லிம் நாடாக இருந்தாலும், ஆட்சியாளர்கள் சுனி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதால்தான். ஆனால், சிரியாவில் மக்கள் சுனி முஸ்லிம்களாகவும், ஆட்சியாளர்கள் ஷியாக்களாகவும் உள்ளனர்.

**லெபனானில் இஸ்ரேலிய படையெடுப்பு:**

1982 இல் லெபனான் மீதான இஸ்ரேலின் முதல் படையெடுப்பு நிகழ்ந்தது. இதைத் தொடர்ந்து 2006 இல் நடந்த லெபனான் போரில் ஹிஸ்புல்லா படையினர் எல்லை தாண்டி ஊடுருவி கெரில்லா தாக்குதலை நடத்தி 2 இஸ்ரேலிய வீரர்களை பிணையாகப் பிடித்தனர்; மேலும் 3 வீரர்களை கொன்றனர். 34 நாள் போரில் 121 ஹிஷ்புல்லா வீரர்கள் இறந்தனர்.

தரைப்படையெடுப்பில் பல சவால்கள் இருந்தாலும், இதனைப் போக்கும் வகையில் ஹிஸ்புல்லாவின் பதுங்குகுழிகள் அழிப்பு, நஸ்ரல்லா உள்ளிட்ட அந்த அமைப்பின் முக்கிய தளபதிகள் கொலை, ஆயுதக் கிடங்குகள் அழிப்பு என அடுத்தடுத்த முன்னேற்பாடுகளை செய்துள்ளது இஸ்ரேல்.

முந்திய படையெடுப்புகளில் நிகழ்ந்த கடும் அழிவின் பாடத்தில் இருந்து இந்த உத்திகளை இஸ்ரேல் தற்போது கையாள்வதாகக் கூறப்படுகிறது.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**


# பீச் கிங் (360 ER) ரக கண்காணிப்பு விமானம் இலங்கை விமானப்படைக்கு கையளிப்பு



ஐக்கிய அமெரிக்காவினால் இலங்கை விமானப்படைக்கு வழங்கப்பட்ட பீச் கிங் (360 ER) ரக கண்காணிப்பு விமானத்தை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் வைபவம் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் இடம்பெற்றது. இந்த வைபவத்தில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல்(ஓய்வு பெற்ற) சம்பத் துய்யகொந்தா மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சங், இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் அமெரிக்க கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளை அதிகாரி அட்மிரல் ஸ்டீவன் கொளர் ஆகியோர் பங்கேற்றனர். கடந்த 10ஆம் திகதி இவ்வைபவம் இடம்பெற்றது.

இலங்கை விமானப்படையின் கடல் சார்ந்த படைப் பிரிவில் இந்த பீச் கிங் ரக விமானம் இணைக்கப்பட உள்ளது. அந்த வகையில் சம்பிரதாய முறை நீர் வரவேற்பு நிகழ்வும் இதன் போது இடம்பெற்றது.

மேலும் இதன் போது இலங்கை விமானப்படை தளபதி மற்றும் அமெரிக்க கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளை அதிகாரி ஆகியோருக்கு இடையிலான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.



இலங்கையின் கடல் சார் கண்காணிப்பு மற்றும் பேரிடர் நடவடிக்கையை மேம்படுத்த கடல்சார் கண்காணிப்பு வகை விமானத்தை கையகப்படுத்துவது குறித்து 2019 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு அதன் விளைவாக புதியதொரு விமானத்தை அமெரிக்க அரசு வழங்கியுள்ளது.

இலங்கை விமானப்படையின் விமானிகள், கண்காணிப்பாளர்கள், விமானப் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய குழு அமெரிக்காவில் பீச்கிராஃப்ட் கிங் ஏர் 360 ஈஆர் விமானம் மற்றும் இந்த பீச் கிராஃப்ட் என இயங்கும் திறன் கொண்ட பீச்கிராப்ட் கிங் ஏர் 360 ஈஆர் விமானத்திற்காக அமெரிக்காவில் ஆய்வு செய்து பயிற்சி பெற்றுள்ளது.

கிங் ஏர் 360 இஆர் கண்காணிப்பு விமானம் என்பது ஒரு நவீன கண்காணிப்பு விமானம் (மல்டி ரோல் லைட் டிரான்ஸ் போர்ட்ஏர்கிராப்ட்) ஆகும். இரட்டை என்ஜின் டர்போபிராப் (டர்போபிராப்) வகையுடன் ஒரே சமயத்தில் 1450 கடல் மைல் பயணிக்கும் திறன் கொண்டது. மேலும் இது அமெரிக்காவின் டெக்ஸ்ட்ரான் ஏவியேஷன் தயாரிப்பு ஆகும்.

**(அஷ்ரப் ஏ சமட்)**



# சா/த பரீட்சையில் திறமைச்சித்தி பெற்ற அஸ்–ஸிறாஜ் மாணவர்கள் கௌரவிப்பு



அக்கரைப்பற்று வலயக் கல்வி பணிமனைக்குட்பட்ட அக்கரைப்பற்று அஸ்ஸிறாஜ் மகாவித்தியாலயத்தில் இம்முறை க.பொ.த சா/த பரீட்சையில் திறமைச்சித்தி பெற்ற மாணவ, மாணவிகளை கௌரவிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை (08) பாடசாலை வளாகத்தில் கல்லூரி அதிபர் ஏ.ஜி.பஸ்மில் தலைமையில் நடைபெற்றது.

இம்முறை இப்பாடசாலையில் க.பொ.த சா/த பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெறுவதற்காக அதிபரின் தலைமையில் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலை அல்லாத நேரத்தில் கூட கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இப்பாடசாலை கற்றலில் மாத்திரம் நின்றுவிடாது விளையாட்டுத்துறை, இணைப்பாடவிதான செயற்பாடுகள் உட்பட ஏனைய துறைகளில் அண்மைக் காலமாக தேசிய ரீதியில் பல சாதனைகளை பெற்று வந்துள்ளமையானது, இப்பாடசாலை சமூகத்திற்கும், கல்வி அலுவலகத்திற்கும் நல்லதோரு வரவேற்பை பெற்றுக்கொடுத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.



பாடசாலைக்கும், அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் திறமைச்சித்தி பெற்ற மாணவர்கள் அதிதிகளினால் நினைவுச் சின்னம் வழங்கி இந்நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மதுல்லாஹ் பிரதம அதிதியாகவும், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.செய்னுடீன், ஆசிரிய ஆலோசகர் எம்.ஏ. தாஹிர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகள், ஆசிரிய, ஆசிரியைகள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் உட்பட பெருமளவானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**றிஸ்வான் சாலிஹூ**
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# அட்டாளைச்சேனை பிரிவில் சமுர்த்தி வீடுகள் கையளிப்பு

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப்பிரிவில் 'ரன்வீமனே' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சமுர்த்தி வீடுகள் திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பீ.ரீ.எம்.இர்பான் தலைமையில் கடந்த 08.10.2024 அன்று நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.அஹமட் சாபீர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அமைக்கப்பட்ட வீடுகளை திறந்து பயனாளிகளிடம் கையளித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் வீடுகளற்ற வறுமையான குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு இவ்வீடுகள் அமைத்து வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஒலுவில் 04 ஆம் பிரிவு, பாலமுனை 02 ஆம் பிரிவு, அட்டாளைச்சேனை 17 ஆம் பிரிவுகளில் சமுர்த்தி திட்டத்தால் அமைக்கப்பட்ட மூன்று வீடுகள் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் பரமானந்தன், சமுர்த்தி முகாமையாளர்களான





ரீ.கே.றஹ்மத்துல்லா, எஸ்.எல். அஸீஸ், சமுர்த்தி வங்கி முகாமையாளர் திருமதி நபீசா மன்சூர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் கலந்து கொண்டனர்.

**முகம்மது றியாஸ்**
(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

# சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதி தவிசாளருக்கு பாராளுமன்ற பணியாளர்கள் கௌரவம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மற்றும் குழுக்களின் பிரதி தவிசாளர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு (09) நடைபெற்றது.

பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைந்ததும் பாரம்பரியமாக நடைபெறும் கௌரவமளிப்பு நிகழ்வாக இம்முறையும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர, பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன மற்றும் பாராளுமன்றத்தின் திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளின் பிரதானிகள், பணியாளர்களின் பங்களிப்புடன் இந்த கௌரவமளிப்பு நிகழ்வு நடைபெற்றது.



இங்கு உரையாற்றிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, தனது பதவிக்காலத்தில் பணிகளை மேற்கொள்வதற்கு பாராளுமன்ற செயலாளர் நாயகம் குழாம் உள்ளிட்ட பணியாளர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்தார்.

பாராளுமன்ற பணியாளர்களுடன் சிநேகபூர்வமான முறையில் கலந்துரையாடிய சபாநாயகர், பாராளுமன்ற பணியாளர்களுடன் குழுப் புகைப்படமும் எடுத்துக்கொண்டார். நிகழ்வில் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் துணைவியார் நெலும் வளவகேயும் இணைந்துகொண்டதுடன், தவிர்க்க முடியாத காரணத்தினால் இந்நிகழ்வில் கலந்துகொள்ள முடியாமையை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் அறிவித்திருந்தனர்.

# தமிழ் மக்களின் அரசியல் பரப்பில் மாற்றத்தை உருவாக்க வேண்டும்

## ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ்

மத்தியில் அரசியலில் மக்கள் எவ்வாறு மாற்றத்தை கொண்டு வந்தார்களோ அதேபோன்று வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் பரப்பிலும் மாற்றத்தை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ள ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, அந்த அரசியல் மாற்றம் ஈ.பி.டி.பியின் வசம் செல்ல மக்கள் ஆதரவு வழங்குவார்களென தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி. போட்டியிடும் அனைத்து மாவட்டங்களிலும் வேட்புமனுக்கள் நேற்று ஏற்றுக் கொள்ளப்பட்டன. வேட்புமனுதாக்கலின் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்

பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடு முழுவதிலும் 10 மாவட்டங்களில் இம்முறை ஈ.பி.டி.பி கட்சி போட்டியிடுகின்றது.

'வடக்கின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, ஆகிய மூன்று மாவட்டங்களிலும் மற்றும் கொழும்பு, புத்தளம் உள்ளடங்கலாக இம்முறை தேர்தலில் ஈ.பிடி.பி. தனது சின்னமான வீணைச் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

கொழும்பிலும் புத்தளத்திலும் உள்ள எமது கட்சியின் ஆதரவாளர்கள் கொழும்பிலும் போட்டியிடுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். அவர்களது கோரிக்கையின் அடிப்படையில் இம்முறை அந்த மாவட்டங்களிலும் போட்டியிடுகின்றது ஈ.பி.டி.பி. இதேநேரம் ஈ.பிடி.பி ஆரம்பகாலம் முதற்கொண்டு தொடர்ச்சியாக கூறிவருகின்ற தேசிய நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் அதை வலுப்படுத்தும் நோக்குடன் கொழும்பு மாவட்டம் பல்லின பல மொழி பேசும் மக்கள் வாழும் இடமாக இருப்பதனால் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய வகையில் வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்" என்றார்.

# அம்பாறையில் 64 வேட்புமனுக்கள் ஏற்பு

காரைதீவு குறூப் நிருபர்

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 72 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் 08 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. 64 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

தாக்கல் செய்த 72 மனுக்களில் 22 கட்சிகளும், 50 சுயேச்சை அணிகளும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. வேட்புமனு பரிசீலனைகள் இடம்பெற்றன. இறுதியில் மேற்படி முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

# யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் தொகுதிகளில் 23 அரசியல் கட்சிகள் போட்டி

பருத்தித்துறை விசேட நிருபர்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் தொகுதிகளில் ஆறு ஆசனங்களுக்காக 23 அரசியல் கட்சிகளும் 21 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

இந்நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 46 வேட்புமனுக்கள் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் கையளிக்கபட்ட நிலையில் அவற்றின் இரண்டு சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டது என யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் தெரிவித்தார்கள்.

இந்த சந்திப்பில் யாழ்ப்பாண, கிளிநொச்சி தேர்தல் உதவி தேர்தல் ஆணையாளர் அமல்ராச், யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம.பிரதிபன், கிளிநொச்சி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்



வேட்புமனு தாக்கலுக்கான காலக்கெடு வெள்ளிக்கிழமை நண்பகல் நிறைவடைந்த நிலையில் வேட்புமனுக்கள் தொடர்பாக ஆட்சேபனைகளை முன்வைக்க அவகாசம் வழங்கப்பட்டது. இந்நிலையில் இரண்டு சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

இம்முறை பாராளுமன்ற தேர்தலில் 44 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் களமிறங்கவுள்ளன.

இந்நிலையில் 23 அரசியல் கட்சிகளின் விபரம் வருமாறு

ஜனசெத பெரமுன, ஈழமக்கள் ஜனநாயக கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி, இலங்கை தமிழரசு கட்சி, மக்கள் போராட்ட முன்னணி, சோசலிச சமத்துவ கட்சி, தேசிய மக்கள் கட்சி, சிறிலங்கா பொதுஜன பெரமுன, எங்கள் மக்கள் சக்தி, புதிய சுதந்திர முன்னணி, அருணலு மக்கள் முன்னணி, சர்வஜன அதிகாரம், ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயக தேசிய கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசிய முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி, அகில இலங்கை தமிழர் மகா சபை, ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகளும் 21 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. மேலும் சுயேச்சைக் குழுக்களுக்கான சின்னங்களும் இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளமை குறுப்பிடத்தக்கது.

## 215,000 அ. டொ. செலவில் இறக்குமதி

# ஆசனிக் நச்சு அடங்கிய டின் மீன்கள் கண்டுபிடிப்பு





இறக்குமதி செய்யப்பட்ட நாட்டுக்கே திருப்பி அனுப்ப நடவடிக்கை

மனித பாவனைக்கு உகந்தற்ற இறக்குமதி செய்யப்பட்ட டின் மீன்களை சுங்கத் திணைக்களம் கைப்பற்றியுள்ளது. சுமார் 02 இலட்சத்து 15,000 அமெரிக்க டொலருக்கு இவை இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் இவற்றில் ஆசனிக் என்ற நச்சுப் பொருள் இருப்பதாகவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் ஒறுகொடவத்தை களஞ்சிய பிரிவில் நேற்று (11) இவை கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றை நாட்டுக்குள் அழித்துவிடாமல் இறக்குமதி செய்யப்பட்ட நாட்டுக்கே திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமென சுற்றாடல், வன ஜீவராசிகள், வனவளம், நீர்வழங்கல், பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பீ.ஆர். பிரபாத் சந்திரசிறி தெரிவித்தார்.

# துருக்கி மற்றும் சீன தூதுவர்கள் பாதுகாப்பு செயலருடன் சந்திப்பு

துருக்கி தூதுவர் செமித் லுட்ஃபு துர்குட் (SemithL tf Turgut ) மற்றும் இலங்கைக்கான சீன மக்கள் குடியரசின் தூதுவர் கி ஜென்ஹோங் Qi Zhenhong ஆகியோர் பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகோந்தவை நேற்று (11) சந்தித்து கலந்துரையாடினர்.

கோட்டே,ஸ்ரீ ஜயவர்தனபுரவிலுள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் துயகோந்த (ஓய்வு) துருக்கிய மற்றும் சீனத் தூதுவர்களுடன் சுமுகமான கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன், நினைவுச் சின்னங்களையும் பரிமாறிக் கொண்டனர். இலங்கையிலுள்ள சீன தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் சவோபோவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார். அத்துடன், பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பதிகாரி எயார் வைஸ் மார்ஷல் பத்மன் டி கொஸ்தாவும் இரு சந்திப்புகளிலும் கலந்து கொண்டார்.

## யாழ். வேட்பாளர்கள், முன்னாள்...

தோன்றியதன் காரணமாக நாளாந்தக் கூலித்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அப்பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் மற்றும் பிள்ளைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது" என்றும் அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஓய்வூதியக்காரர்களுக்கு அடுத்த வாரம்...

3,000 ரூபா கொடுப்பனவை அடுத்த மாதம் முதல் ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்குமாறும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன மற்றும் நிதி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அடுத்த சில தினங்களுக்கு அதிக மழை...

மேலும் இடைவிடாது பெய்து வரும் கடும் மழையினால் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெலிபன்ன இடைமாறும் பகுதி வெள்ளத்தினால் மூழ்கியதால் இப்பகுதி தற்காலிகமாக மூடப்பட்டதாக நெடுஞ்சாலை நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு முகாமைத்துவ பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகம் பி.எச்.குணசிங்க தெரிவித்தார். மத்துகம, அளுத்கம வீதியின் நீர்மட்டம் சுமார் 4 1/2 அடி உயரம் காணப்படுவதால் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெலிபன்ன நுழைவாயிலிலிருந்து நெடுஞ்சாலைக்குள் நுழையவோ வெளியேறவோ முடியாதெனவும் அவர் தெரிவித்தார்.


# இன்றைய பலன்கள்

(12.10.2024)




கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். அலுவலகத்தில் பணிச்சுமை கூடும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சி அளிக்கும்.



**ரிஷபம் :**
எதிர்பார்த்த பணம் வரவு கைக்கு கிடைக்கும். இனிப்பான செய்தி கிடைத்து இல்லத்தில் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்.




**மிதுனம்:**
மகிழ்ச்சி கொள்ளும்படி பணம் கைக்கு வந்து சேரும். நண்பர்கள் உறவினர்களும் தகுந்த நேரத்தில் உதவி செய்வார்கள்.



**கடகம்:**
நண்பர்களின் உதவி மகிழ்ச்சி அளிக்கும். உறவினர்கள் மத்தியில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகளை அடைவீர்கள்.



**சிம்மம்:**
வரவேண்டிய பணம் தாமதம் இன்றி வந்து சேரும். எதிர்பார்த்த காரியங்கள் இனிதே நடப்பதால் மனதில் இனபுரியாத மகிழ்ச்சி குடியேறும்.




**கன்னி:**
சமூகத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். பேச்சை குறைத்து செயல்களில் அதிக ஈடுபாட்டுடன் இருந்து முக்கிய காரியங்களை சாதிப்பீர்கள்.




**துலாம்:**
பணம் கைக்கு வருவதில் சிறுசிறு தாமதங்கள் ஏற்படலாம். பெண்களின் மரியாதைக்கு பங்கம் வராமல் நடந்து கொள்வதன் மூலம் நன்மைகளை அடைவீர்கள்.




**விருச்சிகம்:**
பணப்பரிவர்த்தனையில் நிதானப் போக்கும் அவசியம். வரவேண்டிய பணம் தாமதமாக வந்து சேரலாம்.



**தனுசு:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பணிகளில் அதிக கவனத்துடன் இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோப பார்வைக்கு இலக்காக நேரிடும்.



**மகரம்:**
வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நன்மை தரும். எதிர்பார்த்தவைகள் சற்று தள்ளி போகலாம். வட திசையில் இருந்து வரும் தகவல் மனதுக்கு நிம்மதியை தரலாம்.



**கும்பம்:**
மனதில் சலனமும் செய்யும் காரியங்களில் தடுமாற்றமும் ஏற்படலாம். அவசியமான காரியங்களை கவனமுடன் செய்வது பிரச்சனைகளை தவிர்க்கும்.



**மீனம்:**
எதிர்பார்க்கும் உறவினர்கள் நண்பர்கள் கேட்ட உதவி செய்ய முடியாமல் அவர்களின் அதிர்ச்சிக்கு ஆளாகலாம்.



## புத்தளத்தில் 8... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள தீப ஜாதிக பெரமுன மற்றும் சமபிம கட்சி ஆகிய இரண்டு கட்சிகளே நிராகரிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியுமான எச்.எம்.எஸ்.பி. ஹேரத் தெரிவித்தார்.

அதற்கமைய இம்முறை பொதுத் தேர்தலில் 24 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும், 15 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 39 கட்சிகள் போட்டியிடுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நேற்றைய தினம் புத்தளம் நகரம் மற்றும் மாவட்டச் செயலகம் என்பவற்றில் கடும் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

## வேட்புமனுவில் ஒப்பமிட்ட...

மாவட்ட செயலகத்துக்கு வந்த பின்னரே தனது பெயர் நீக்கப்பட்டதை அவர் அறிந்தார்.

தமிதா அபேரத்னவின் பெயர் நீக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட தலைவர் ஹேஷா விதானகே, தமிதா அபேரத்ன ஐக்கிய மக்கள் சக்திக்கு முக்கிய பங்கு வகித்தாலும், தேர்தலில் எங்கள் மாவட்டத்துக்கு வெளியிலிருந்து ஒரு வேட்பாளரை நிறுத்த விரும்பவில்லை என்பதுடன், இரத்தினபுரி மாவட்ட உறுப்பினர்கள் அவரது பெயரை உள்ளடக்குவதில்லையென தீர்மானித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## முன்னாள் எம்.பி....

விழுந்ததையடுத்து அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

76 வயதாகும் இவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் அவரது வீட்டுப் பணிப்பெண் சுகயீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெறுவதனால் அவர் மட்டுமே வீட்டில் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர், அநுராதபுரம் மேற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளராக நீண்டகாலம் கடமையாற்றியதுடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் பிரதி அமைச்சராகவும் சேவையாற்றியுள்ளார்.

## தமிழ் தேசியத்தை...

அதனை மக்களுக்கு வெளிப்படையாகவே கூற விரும்புகிறேன்.

முதலாவதாக கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழரசுக் கட்சியானது சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்க எடுத்த தீர்மானம் கட்சியின் தீர்மானமாக கருத முடியாது. ஏனெனில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வவுனியாவில் கலந்துரையாடலுக்கு வருமாறு அழைக்கப்பட்ட நிலையில் அங்கு கலந்துரையாடல் நடைபெறவில்லை.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஒரு வெள்ளை பேப்பரில் ஏதோ எழுதிக்கொண்டு வந்து சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தை எடுக்கிறோமென அவர் தன்னுடைய தீர்மானத்தை கட்சியின் தீர்மானமாக தெரிவித்தார்.

நான் அதைப் பிழை எனக் கூறினேன். கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டு கலந்துரையாடல் இடம்பெறாமல் தீர்மானம் எடுக்கும் கூட்டமாக மாறியதால் நான் அது தவறு என சுட்டிக்காட்டி வெளியேறினேன்.

தற்போது நாடாளுமன்ற தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான குழு கூடிய போது அதில் வேட்பாளராக சமூக ஊடகங்களில் தங்களை அறிமுகப்படுத்தியவர்கள் தெரிவுக் குழுவில் அங்கம் வகித்தமை முரணான விடயம்.

அது மட்டும் அல்லாது வேட்பாளர் தெரிவிக் குழுவில் மட்டக்களப்பில் இருந்து நான்கு பேரை நியமித்தார்கள். கொழும்பு மாவட்டத்தில் இருந்து எவரையும் நியமிக்கவில்லை.

நான் கொழும்புக் கிளை தலைவராக 14 வருடங்கள் இருக்கிறேன். இவ்வாறு திட்டமிட்ட முறையில் தமிழ் தேசியத்தை அழிப்பதற்காக சிலர் தெற்கு முகவர்களுடன் கைகோர்த்து தமிழரசுக் கட்சியை அழிப்பதை அதே கட்சியிலிருந்து பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை என்றும் அவர்தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## கிழக்கு சுகாதார சேவைகளை வலுப்படுத்த ஆளுநர் நடவடிக்கை

**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**



கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் கலாநிதி பேராசிரியர் ஜெயந்தில் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சுகாதார அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

சுகாதாரத் திணைக்களம் மற்றும் அரசு திணைக்களங்களின் அரசு சேவையாளர்களுக்கு தொற்றாநோய்கள் பரவாது இருப்பதற்காக உடல் பரிசோதனை செய்வதற்குரிய வாழ்வியல் ஆரோக்கிய நிலையம் ரூ.65 மில்லியன் செலவிலும், பொதுச் சுகாதார ஆய்வுக் கூடம் சுமார் ரூ.50 மில்லியன் செலவிலும் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதார மாதுக்களின் விரிவுரைகளுக்கு பயன்படுத்துவதற்கான கற்கை மண்டபமும் சுமார் ரூ.80 மில்லியன் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது .

இந்த தரம் வாய்ந்த சுகாதார கட்டட நிலையங்களை புதிய ஆளுநர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைபவரீதியாக திறந்து வைத்தார். திறப்பு விழாவில் கிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் ஆர். எம்.எல். ரத்நாயக்க ஆளுநரின் செயலாளர் ஏ. மத நாயக்க கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலா ளர் எஸ். சிவலிங்கம் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் ஏ .கொஸ்தா உட்பட பல பிரமுகர்களும் இங்கு பிரசன்னமாக இருந்தனர்.

இங்கு கருத்து வெளியிட்ட புதிய ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக் களத்தின் பணிகள் இலகுவாக பொதுமக்களை சென்றடைவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையை சிறப்பாக செயற்படுத்துவதற்கு சுகாதார சேவையின் பணியாளர்களுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கிழக்குப் பல் கலைக்கழகத்துடன் இணைந்த வகையில் எதிர்காலத்தில் சில ஆய்வு நடவடிக்கைகள் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள் ளப்படும் என்றும் தெரிவித்தார்.

## உளச் சுகாதார தினம், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுஷ்டிப்பு

**காரைதீவு குறூப் நிருபர்**

உலக உளச் சுகாதார தினத்தை முன்னிட்டு சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர்.த பிரபா சங்கர் தலைமையில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

வைத்தியசாலையின் உளச் சுகாதாரப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் கசுன் கடுவல மற்றும் திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.ஆர். நியாஸ் அஹமட் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பணிப்பாளர் வைத்தியர் சஹீலா இஸ்ஸடீன் சபீக்சம்மாந்துறை பிரதேச செயலாளர் அல்ஹாஜ் எஸ். எல்.எம் ஹனிபா சம்மாந்துறை பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டீ.எஸ். ஜயலத் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். மேலும் இந்நிகழ்வுக்கு கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையினதும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை, வைத்தியர்கள் உத்தியோகத்தர்கள் ஊழியர்களின் பங்களிப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலக, சம்மாந்துறை பொலிஸ் நிலைய மற்றும் மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் முதலாவதாக நடைப்பவனியும் இரண்டாவதாக வீதி நாடகமும் இறுதியாக உளநல மருத்துவர் டொக்டர் எம்.ஜே.நௌபல் உளநல தொனிப் பொருளுடன் கூடிய விரிவுரையும் நிகழ்த்தப்பட்டது.

வீதி நாடகம் காரைதீவு விபுலானந்தா மத்திய மகா வித்தியாலய மாணவர்களால் நடிக்கப்பெற்றமை என்பது குறிப்பிடத்தக்கது.

## காரைதீவில் கர்நாடக இசைக்கச்சேரி

**காரைதீவு குறூப் நிருபர்**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றமும் இணைந்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவையொட்டி நடத்திய இரண்டாவது கர்நாடக இசைக் கச்சேரி காரைதீவு விபுலானந்த மணி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தியாவில் இசைத் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்ற அழகரெத்தினம் கல்யாண்சரண் (வாய்ப்பாட்டு),சுதாகரன் கோவிசரண்( மிருதங்கம் ) ,பிரிசில்லா ஜோர்ஜ் (வயலின்) ஆகியோர் கர்நாடக இசைக்கச்சேரியை ஒருமணி நேரம் சிறப்பாக நடத்தினர். இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக காரைதீவு சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணி மன்றத்தின் போஷகர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.



திகாமடுல்ல மாட்டத்தில் சீ.எம். கலீம் தலைமையிலான சுயேட்சை குழு வேட்பு மனுவை நேற்று (11) அம்பாறை மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்த போது படம்.

படம்:பாலமுனை தினகரன் நிருபர்

திகாமடுல்ல

## தேர்தல் மாவட்டத்தில் இலட்சத்துக்கும் அதிகமானோர் வாக்களிக்க தகுதி

**ஒலுவில் விசேட நிருபர்**

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 22 அரசியல் கட்சிகளும், 50 சுயேட்சைக் குழுக்களுமாக மொத்தமாக 72 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், மாவட்ட அரசாங்க அதிபருமான சிந்தக அபேவிக்கிரம தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி, சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, இலங்கை தமிழரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா சமாஜவாதி கட்சி, ஜனவத பெரமுனை, அகில இலங்கை தமிழ் மகாசபை, ஸ்ரீ லங்கா ஜீவ கஜாதிக பெரமுன, ஈ.பி.டி.பி, அபே ஜனபல, தேசிய ஜனநாயக முன்னனி, ஆகிய கட்சிகள் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 07 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக 10 பேர் ஒவ்வொரு கட்சி அல்லது சுயேட்சைக்குழுவிலிருந்து போட்டியிடுவர். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி என்பன தனித்துப் போட்டியிடுகின்றன.

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட முன்னாள் அமைச்சர்களான ஏ. எல். எம்.அதாவுல்லாஹ், தயா கமகே, ஆகியோரின் தலைமையில் வேட்பு மனுவை தாக்கல் செய்யப்பட்டது. இம்முறை அம்பாறை மாவட்டத்தில் பலத்த போட்டி நிலவும் என எதிர்பாக்கப்படுகின்றது. பாராளுமன்றத் தேர்தலில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திலிருந்து 05 இலட்சத்தி 55 ஆயிரத்தி 432 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். அம்பாறை தொகுதியில் 01 இலட்சத்தி 88 ஆயிரத்தி 222 வாக்காளர்களும், சம்மாந்துறை தொகுதியிலிருந்து 99 ஆயிரத்தி 727 வாக்காளர்களும், கல்முனை தொகுதியிலிருந்து 82 ஆயிரத்தி 830 வாக்காளர்களும், பொத்துவில் தொகுதியிலிருந்து 01 இலட்சத்தி 84 ஆயிரத்தி 653 வாக்காளர்களும், வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

## திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும்

### இலங்கை தமிழரசு கட்சியினர்

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என தமிழரசு கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழரசு கட்சி சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் நேற்று (11)வேட்பு மனு தாக்கல் செய்தார்.

இலங்கை தமிழரசு கட்சி சார்பில் நால்வரும் ஏனைய கட்சிகளிலிருந்து மூவரும் திருகோணமலை மாவட்டத்தில் இம்முறை வீட்டு சின்னத்தில் போட்டியிடவுள்ளனர். இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ச.குகதாசன் தலைமையிலான குழுவினர்,

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். வடகிழக்கில் மாவட்டத்தில் மாத்திரம் இணைந்து கூட்டணியாக வீட்டு சின்னத்தில் போட்டியிடுகிறோம் எதிர்காலத்தில் மக்களின் உரிமைகளோடு இணைந்த அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கவுள்ளோம் ஓரணியாக இணைந்தால் தான் இரண்டு ஆசனங்களையாவது பெற முடியும். கடந்த தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போனது. எனவே தான் தமிழ் மக்களின் இருப்பை பாதுகாக்க கூட்டணியாக இணைந்துள்ளோம் . கடந்த 30 வருட கால யுத்தம் காரணமாக பாதிப்படைந்த தமிழ் சமூகம் இவ்வாறான விடயங்களில் தமிழ் தேசியத்தை பாதுகாக்க ஒற்றுமையாக செயற்படுவது சாலச் சிறந்தது என தெரிவித்தனர்.



கிழக்கு மாகாண ஆளுநருக்கும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹணவுக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது, இருவரும் சினேகபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு, பிரதிப் பொலிஸ் மா அதிபர் புதிய ஆளுநருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

(படம்: கிண்ணியா மத்திய நிருபர்)

## தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பு மனு தாக்கல்



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை நேற்று தாக்கல் செய்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் அருண்தம்பி முத்து வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அருண்தம்பி முத்து தலைமை வேட்பாளராக போட்டியிடுகின்றார்.



இன்று பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனையில் நவராத்திரி விழா வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது இங்கு பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றதுடன் சிவசிறி யோகராசா குருக்களினால் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றது .

படம்: பாண்டிருப்பு தினகரன் நிருபர்

## மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடை பவனி

**கிண்ணியா தினகரன் நிருபர்**

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர். எம்.எச்.எம். ரிஸ்வி தலைமையின் கீழ் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி நேற்றுமுன்தினம் கிண்ணியா சுகாதார வைத்திய பணிமனையிலிருந்து கிண்ணியா பிரதான வீதி வழியாக நடைபெற்றது.

இந் நி க ழ் வி ல் கிண்ணியா பிரதேச செயலாளர். எம்.எச்.எம். கனி, திருகோணமலை தாய் சேய் நல மருத்துவ அதிகாரி டாக்டர் ஏ.எச்.சமீம், குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்: ஏ.எம். அஜித் என பலரும் கலந்துகொண்டனர்.

## அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற வாணி விழா

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரி இந்து மாணவர்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்த வாணி விழா வியாழக்கிழமை (10) கல்லூரியின் விழா மண்டபத்தில் பொறியியல்துறை விரிவுரையாளர் கே.பரமானந்தனின் நெறிப்படுத்தலில் கல்லூரி அதிபர் எம்.எம்.ஹசன் தலைமையில் நடைபெற்றது. இவ்வினிய விழாவில் கல்லூரி மாணவர்களின், வாணி விழா தொடர்பான உரைகள், கலை நிகழ்ச்சிகள், பாடல்கள் , பஜனை என்பன நிகழ்த்தப்பட்டதுடன், விசேட பூஜை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் கல்லூரியின் பதிவாளர் எம்.ஏ.சி.எம் றகீப், உதவியதிபர் எம்.எம். சஹ்பான், நூலகர் எம்.எம்.றுமைஸ், பகுதித் தலைவர்களான ஏ.எல்.எம்.றியாஸ், எம்.ஏ றாபி, எஸ் . சனீஜ் எம்.பி.எம். சிராஜ் உள்ளிட்ட விரிவுரையாளர்கள், கல்லூரியின் கல்வி சார், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், மாணவ, மாணவிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## தனிமையில் வசித்து வந்த மூதாட்டி தீக்காயங்களுடன் சடலமாக மீட்பு

**(யாழ். விசேட நிருபர்)**

யாழ்ப்பாணத்தில் வீடொன்றில் தனிமையில் வசித்து வந்த மூதாட்டியொருவர் தீக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கரணவாய் தெற்கை சேர்ந்த 70 வயதான மூதாட்டியான குணராஜசிங்கம் ஞானேஸ்வரி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த மூதாட்டி வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளார். நேற்றுமுன்தினம் மூதாட்டியின் நடமாட்டத்தை காணாத அயலவர்கள், மூதாட்டியின் வீட்டினுள் சென்று பார்த்த போது மூதாட்டி தீயில் எரிந்து உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில்

# 06 உறுப்பினர்கள் தெரிவுக்கு 396 வேட்பாளர்கள் போட்டி

**யாழ். விசேட நிருபர்**

யாழ். மாவட்டத்தில் 23 அரசியல் கட்சிகளும், 23 சுயேச்சைகுழுக்களும் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தன. 02 சுயேட்சை குழுக்களின் வேட்பு மனுக்கள நிராகரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்தலில் போட்டிடுவதற்காக 23 அரசியல் கட்சிகளும் 23 சுயேச்சை குழுக்களும் வேட்பு மனுக்களை கையளித்திருந்தன.

வேட்பு மனுக்களை கையேற்கும் காலம் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் 12 மணியுடன் நிறைவுக்கு வந்தது. இங்கு இரண்டு சுயேச்சை குழுக்களின் வேட்பு மனுக்ள நிராகரிக்கப்பட்டன.

23 அரசியல் கட்சிகளும் 21 சுயேச்சை குழுக்களும் தேர்தலில் போட்டியிடவுள்ளன. 06 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 396 பேர் வேட்பாளராக களமிறங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 05 இலட்சத்து 93ஆயிரத்து 187 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது




யாழ். வண்ணை வெங்கடேச ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர் திருவிழா நேற்று காலை பக்திபூர்வமாக நடைபெற்றது.

# வடக்கின் உதயம்

## அங்கஜன் இராமநாதன் தபால் பெட்டி சின்னத்தில் போட்டி



யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தபால் பெட்டி சின்னத்தில் ஜனநாயக தேசிய கூட்டணியில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் நேற்று காலை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கையளித்தனர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கடந்த தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியில் போட்டியிட்டு யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்கை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வன்னியில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் வேட்புமனு தாக்கல்



**(வவுனியா விசேட நிருபர்)**

வன்னி மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை முன்னாள் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தாக்கல் செய்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இலங்கை தொழிலாளர் கட்சியின் கங்காரு சின்னத்தில் போட்டியிடுகின்றார்.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் நேற்று காலை வேட்புமனுவை தாக்கல் செய்திருந்தார். இதன்போது கட்சியின் முக்கியஸ்தர்கள் வருகை தந்திருந்தனர்.

## காணி நிலம் கோரி செட்டிக்குளம் மெனிக்பாம் மக்கள் ஆர்ப்பாட்டம்



**(வவுனியா விசேட நிருபர்)**

வவுனியா, செட்டிக்குளம், மெனிக்பாம் பிரதேச மக்கள் காணி நிலம் கோரி நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செட்டிக்குளம், மெனிக்பாம் பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டு நீண்டகாலமாக வசித்துவரும் குடும்பங்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பிரதேசத்தில் வாழும் 70ற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கான காணி வேண்டும் என கோரியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 8 வருடங்களுக்கு மேலாக உறவினர்கள் வீடுகளில் வசித்து வரும் இவர்களுக்கு காணி நிலம் ஒதுக்கப்பட்டுள்ள போதும் இதுவரை தரவில்லையென இவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

## தமிழர் விடுதலை கூட்டணி வன்னியில் வேட்புமனு தாக்கல்



**(வவுனியா விசேட நிருபர்)**

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று வேட்புமனு தாக்கல் செய்தது.

நடைபெறவுள்ள தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று காலை வேட்பு மனு தாக்கல் செய்தது. தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவரும் சமூக ஆர்வலருமான செ.சந்திரகுமார் (கண்ணா) முதன்மை வேட்பாளராக கொண்டு போட்டியிடுவதுடன், விசேட தேவையுடைய பெண்ணொருவரும் வேட்பாளராக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

இதன்போது கட்சியின் முக்கியஸ்தர்கள் வருகை தந்திருந்தனர்.

## சரஸ்வதி சிலை திறப்பு

**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

பண்ணாகம் பல்லசுட்டி பகுதியில் புதிதாக அமைக்கப்பெற்ற 8 அடிகள் உயரம் கொண்ட சரஸ்வதி சிலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. கதிரமலை யோகேஸ்வரன் என்பவரின் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், பல்லசுட்டி காந்தி ஜீ முன்பள்ளி வளாகத்தில் குறித்த சிலை அமைக்கப்பட்டு, நவராத்திரி விரதத்தின் சரஸ்வதிக்கான விரதத்தின் ஆரம்ப நாளான நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.


## நுவரெலியாவில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வேட்புமனு தாக்கல்



**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

நடைபெறவுள்ள 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக அதன் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன் உள்ளிட்ட குழுவினர் (11.10.2024) நேற்று காலை நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்துள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டணியின் கீழ் யானை சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

நுவரெலியா மாவட்ட தலைமை வேட்பாளாரான ஜீவன் தொண்டமான் மற்றும் வேட்பாளர்கள் உள்ளிட்ட பலர் மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்து வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்.




## ரந்தெனிய பிரதேசத்தில் சாரதியின் சாதுரியத்தினால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவிப்பு

**(ஊவா சுழற்சி நிருபர்)**

எல்ல - வெல்லவாய பிரதான வீதியில் வெல்லவாய பொலிஸ் எல்லைக்குட்பட்ட ரந்தெனிய பிரதேசத்தில் பயணித்த இ.போ.ச பஸ் வண்டி திடீரென பிரேக் அறுந்துள்ள நிலையில் சாரதியின் சாதுரியத்தினால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, நுவரெலியாவிலிருந்து காலி நோக்கி வியாழனன்று பயணித்துக்கொண்டிருந்த இ.போ.ச.பஸ் வண்டி எல்ல வெல்லவாய பிரதான வீதியில் வெல்லவாய பொலிஸ் எல்லைக்குட்பட்ட ரந்தெனிய பிரதேசத்தில் திடீரென பிரேக் அறுந்துள்ள



நிலையில் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து சென்றுள்ளது. இதனையறிந்த சாரதி சாதூரியமாக வீதி ஓரமாகவிருந்த இரு மலைக்கிடையில் பஸ் வண்டியினைச் செலுத்தி இயந்திரத்தினை நிறுத்தியுள்ளார். இதனால் யாருக்கும் எவ்வித காயங்களும் இல்லாது பல உயிர்கள் கப்பாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளை ஏற்றிச் சென்ற மாத்தறை பஸ் டிப்போவுக்குச் சொந்தமான இ.போ.ச.பஸ் வண்டியே இவ்வாறு எதிர்பாராத விதத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ் விபத்துக் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் எல்ல போக்கு வரத்துப் பொலிஸார் சாரதியின் சாதுரியத்தினை பாராட்டியுள்ள அதேவேளை பஸ் வண்டியில் பயணித்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகள் அனைவரும் கைகூப்பி வணங்கி பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

## வடிவேல் சுரேஸ் வேட்புமனு தாக்கல்

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

ஐக்கிய ஜனநாயக குரல் சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ், பதுளை மாவட்ட செயலகத்தில் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் ரஞ்சன் ராமநாயக்க தலைமையில் புதிய கட்சியாக ஐக்கிய ஜனநாயக குரல் என்ற கட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இக் கட்சியின் ஒலிவாங்கி சின்னம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் வேட்பு மனுவை தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார்.

## சப்ரகமுவ ஆளுநரின் மக்கள் சந்திப்பு தினம் திங்கட்கிழமை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

சப்ரகமுவ மாகாணப் பொதுமக்கள் சந்திப்பு ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை இடம்பெறும் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இச்சந்திப்பு இரத்தினபுரி புதிய நகரத்தில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபை ஆளுநர் காரியாலயத்தில் நடைபெறும் எனவும் இதில் இரத்தினபுரி கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம் எனவும் அவர் தெரிவித்தார்

அத்துடன் கேகாலை மாவட்ட மக்களுக்கு மேலதிக சலுகையாக கேகாலை ரதம்பலாவத்தையில் அமைந்துள்ள ஆளுநர் காரியாலயத்திலும் இச்சந்திப்பு இடம் பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

## வலப்பனை – கண்டி வீதி விபத்தில் பாடசாலை மாணவன் உயிரிழப்பு

**(அக்குறணை குறூப் நிருபர்)**

வலப்பனை, கண்டி வீதியில் இடம் பெற்ற விபத்து ஒன்றில் காயமடைந்த 8 வயதுடைய சிறுவன் வலப்பனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளதோடு, மற்றுமொருவர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வலப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி பிரதான வீதியில் அமைந்துள்ள "விஷன் மதர்" ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் இச்சம்பவம் இடம் பெற்றதாக. வலப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி பகுதியிலிருந்து வலப்பனையை நோக்கி வந்த விறகு லொறி ஒன்று கட்டுப்பாட்டை மீறி, இரண்டு முச்சக்கர வண்டிகளில் மோதியுள்ளது. அதன்போது வீதியில் பயணித்த பாடசாலை மாணவர்கள் இருவர் மீதும் அவ்வாகனம் மோதியுள்ளது.

இந்த விபத்து சம்பவத்தில் காயமடைந்த 8 வயதுடைய சிறுவன் வலப்பனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாகவும் 14 வயதுடைய சிறுமி ஒருவர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சம்பவத்தில் தொடர்புடைய லொரியின் சாரதி வலப்பனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## கணவன் கூரிய ஆயுதத்தால் தாக்கி மனைவி அதிதீவிர சிகிச்சைப்பிரிவில்

**(அக்குறணை குறூப் நிருபர்)**

கணவன் தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் மனைவி பலத்த காயங்களுக்குள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

டயகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டயகம மேற்கு பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. குடும்ப தகராறு காரணமாக கணவன் தனது மனைவியை தாக்கியதாகக் கூறப்படுகிறது. காயமடைந்தவரான 26 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாய், அயலவர்களின் உதவியுடன் நுவரெலியா மாவட்ட வைத்திய சாலையில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் 33 வயதுடைய அவரது கணவன் கைது செய்யப்படுள்ளார்.

சந்தேக நபர் கத்தி ஒன்றுடன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். மேலும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை டயகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## களுகங்கையின் நீர்மட்டம் உயர்வு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**



இரத்தினபுரி மாவட்டத்தின் பல இடங்களில் பரவலாக பெய்து வரும் மழை காரணமாக களுகங்கையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

இரத்தினபுரியில் களுகங்கை முவகமவில் அமைந்துள்ள தன்னியக்க அளவு மானியின் படி நேற்று (11) மாலை வரை 5.2 மீற்றர் வரை நீர்மட்டம் உயர்ந்திருந்து காணப்பட்டது.

நீர்மட்டம் 6 மீற்றரை அண்மித்தால் சிறு வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்ற நம்பிக்கை இப்பிரதேச மக்களிடம் பரவலாக இருந்து வருகிறது.

அண்மித்த சிற்றாறுகளிலும் நீர் மட்டம் உயர்ந்து வருவதால் சிறு வெள்ளம் ஏற்படும் அறிகுறி இருப்பதனால் பிரதேச மக்கள் அவதானமாக இருக்குமாறு இரத்தினபுரி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். இதேவேளை களுகங்கையின் பல இடங்களில் உயிர்காப்பு வீரர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# நகர்வலம்









களுத்துறை மரிக்கார் சவூதி பத்ரியா ஜனாஸா சங்கத்தினால் களுத்துறை சஹன முதியோர் இல் லத்திற்கு பகலுணவு வழங்கப்பட்டது. இதில் தலைவர் ஏ.எஸ் எம்.நிஸார் , பிரதான செயலாளர் எம்எம்.ஏ.ஸதாத் ஆகியோரும் அங்கத்தவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## கிந்தோட்டை ஸாஹிராவின் பழைய மாணவிகளின் ஒன்றுகூடல் இன்று

காலி கிந்தோட்டை ஸாஹிரா தேசியப் பாடசாலையின் பழைய மாணவிகளின் ஒன்று கூடல் இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் பாடசாலை மைதான வளாகத்தில் நடைபெறவுள்ளது.


கல்லூரியின் பிரதி அதிபர் சமீம் மிஹ்ராஜ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்லூரியின் பழைய மாணவியும் வைத்தியருமான டாக்டர் ஸஹீலா இஸ்ஸதீனும், விசேட அதிதியாக ரொஷானா நஸ்ரினும், கௌரவ அதிதியாக கல்லூரியின் முன்னாள் ஆசிரியைகளான திருமதி லைலா ஸகரிய்யா, திருமதி பௌசியா , திருமதி நஜ்முன்னிஸா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பழைய மாணவிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொட்டாஞ்சேனை

## ஸ்ரீஸ்ரீராதாகிருஷ்ண ஆலயத்தில் இம்மாதம் 17 முதல் தாமோதர மாதம் அனுஷ்டிப்பு

கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தில் இம்மாதம் 17ஆம் திகதி முதல் எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதி வரை புனிதம் மிகு தாமோதர மாதம் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.



இந்தத் தாமோதர மாதத்தில் தினமும் மாலை 6.00 மணிமுதல் விஷேட பூஜை, விளக்கேற்றல், கீர்த்தனை என்பனவும் அதைத் தொடர்ந்து பக்தர்களுக்குப் பிரசாதம் வழங்கல் என்பனவும் இடம்பெறும்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணரை, அன்னை யசோதை கயிற்றால் உரலில் கட்டிய நிகழ்வை நினைவு கூரும் வகையில் இந்தத் தாமோதர விழா வருடாந்தம் கொண்டாடப்படுகிறது. தாம என்றால் கயிறு. உதர என்றால் வயிறு. அதுவே தாமோதர எனப்படுகிறது. பகவான் கிருஷ்ணர் காலிய என்னும் நாகத்தின் மீது நடனமாடியது, நரகாசுரனை வதம் செய்தது, கோவர்த்தன மலையை சுண்டு விரலால் தூக்கிக் குடையாகப் பிடித்தது போன்ற பல தெய்வீக லீலைகள் இம்மாதத்தில் தான் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.பக்தர்கள் வருகை தந்து வைபவத்தில் பங்குகொண்டு பகவான் திருவருளைப்பெற்றுய்யுமாறு ராதாகிருஷ்ண ஆலயம் அழைப்பு விடுக்கிறது.



## பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை - கே.ரீ.குருசுவாமி

“ஜனநாயக மக்கள் முன்னணியின்” பொதுச்செயலாளர் பதவியிலிருந்தும் “தமிழ் முற்போக்கு கூட்டணியின் ” அரசியல் குழு உறுப்பினர் பதவியிலிருந்தும் வெளியேறிய கே.ரீ.குருசுவாமி இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என தெரிவித்தார்.



கடந்த வியாழக்கிழமை (10) கொழும்பு ஸ்ரீ சூர்யாஸ் ஹோட்டலில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 40 வருட காலமாகத் தமிழ்ச் சமூகப் பொதுச் சேவைகளைச் செய்துவருகின்றேன். இக் காலகட்டத்தில் மூன்று முறை கொழும்பு மாநகர சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளேன். 2015 ஆம் ஆண்டு மேல் மாகாணசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு நான்கு வருடங்களாக அப்பதவியில் இருந்தும் பணியாற்றியுள்ளேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக, அரசியல்வாதிகள் பாராளுமன்ற உறுப்பினர்களாக, அமைச்சர்களாக மக்களின் வாக்குபலத்தால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தங்களின் கடமைகளை நேர்மையாகச் செய்வதில்லை என்பது எல்லோரும் அறிந்த விடயம். நானும் இதனை அறிவேன். இவ்வாறான பிழையான போக்கை மாற்ற முடியாமல் முடிந்தளவு போராடியுள்ளேன். இவை சாத்தியப்படாமையினால் தான் மேற்படி கட்சிப் பதவிகளிலிருந்தும் கட்சியிலிருந்தும் வெளியேறியுள்ளேன்.தன்னை ஒரு கடவுளாகக் கருதி நேரடிப் பிரதிநிதிகள் போல நினைத்துக் கொண்ட ஒரு சிலர் பதவிகளையும் வாய்ப்புக்களையும் முழுவதுமாக பெற்றுக்கொண்டு, தமது சமூகத்தினது பிரச்சினைகள் என்னவென்று அறிந்திருந்தும் அவற்றிற்குத் தீர்வினை காண எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்காமையின் விளைவு கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளாக வெளிவந்திருக்கிறது.எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் இதே நிலைமைதான் ஏற்படப்போகின்றது என நினைக்கின்றேன். அரசியல்வாதிகள் மீது வெறுப்படைந்த மக்கள் மாற்றத்தையும் , ஊழலற்ற அரசியலையும் எதிர்பார்த்தே “தேசிய மக்கள் சக்தியை” ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.இந்த மாற்றத்தின் மூலம் நாட்டிலே புதிய கலாசாரம் உருவாகும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது.

அந்த நம்பிக்கைக்கு ஏற்றாற் போல நானும் செயற்பட விரும்புகின்றேன். எனது எதிர்கால அரசியல் பயணத்தை சமூகம் சார்ந்து செம்மையாகவும் உண்மையாகவும் நடாத்த எத்தனித்துள்ளேன்.

அதற்குரிய கால அவகாசமாகவே இம்முறை இடம்பெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல் இருப்பதற்கு தீர்மானித்துள்ளேன். இது எனது தனித்த முடிவன்று. கடந்த செவ்வாய்க்கிழமை (08) ஆம் திகதி என்னால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்துரையாடி எடுக்கப்பட்ட தீர்மானம் ஆகும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் என தெரிவித்தார்.

## இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது வழங்கும் விழா

### இம்முறை இலங்கையில்

பல்வேறு துறைகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வரும் தெரிவு செய்யப்பட்ட இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது விழா, ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஜே. எம். பாஸித் தலைமையில் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை அம்பாறை மாவட்டம் ஒலுவிலில் அமைந்துள்ள தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்ப பீட கேட்போர் கூடத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரபல ஊடக ஆளுமைகள் மற்றும் பல பிரபலங்கள் கலந்து கொள்ளும் இவ்விருது விழாவுக்கு பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதிகளாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில்,

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழக இஸ்லாமிய ஆய்வுகள் மற்றும் அரபு பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எம். எஸ். எம். ஜலால்தீன் மற்றும் தினகரன், வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




நாட்டில் பெய்து வரும் அடைமழை காரணமாக, வியாழக்கிழமை முந்தல் பகுதி வீதிகளில் மற்றும் பாடசாலை அண்மித்த பகுதிகளில் நீர் நிரம்பிக் காணப்பட்டன.

(படம்: உடப்பு குறூப் நிருபர்)

## டிஸ்கோ ராஜா பௌண்டேஷன் வழங்கும் விஜயதசமி மகாபூஜை

டிஸ்கோ ராஜா பௌண்டேஷன் வழங்கும் விஜயதசமி மகாபூஜை நிகழ்வுடன் கலைஞர் டிஸ்கோ ராஜாவின் நாற்பதாண்டு கால கலைச் சேவையின் முன்னோட்ட நிகழ்வு இன்று 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பகல் 12மணிவரை கொழும்பு பொரளை ருகுணுகலா மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

இது சிரேஷ்ட கலைஞர்கள், வளர்ந்து வரும் அத்தனை கலைஞர்களுக்குமான திறந்த அழைப்பிதழ் என குறிப்பிட்டுள்ள ஏற்பாட்டாளர்கள், அனைவரைருக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நிகழ்வில் டிஸ்கோ ராஜாவின் புதிய திரைப்பட பூஜை மற்றும் புதிய நடன வகுப்புகளுக்கான ஆரம்பமும் இடம்பெறும்.

## நியூசிலாந்தில் சிறுகதைத் தொகுப்பு வெளியீடு

நியூசிலாந்தில் வசித்து வரும் மூத்த பொறியியலாளரும், சமூகச் செயற்பாட்டாளருமான யோர்ச் அருளானந்தம் எழுதிய சிறுகதைத் தொகுப்பு நூலான மண்ணும் மனிதர்களும் இன்று 12/10/24 ஒக்லாந்தில் வெளியிடப்படவுள்ளது.




ஒக்லாந்திலுள்ள திறீ கிங்ஸ், பிக்லிங் மாநாட்டு மைய மண்டபத்தில் இன்று மாலை 2.45 க்கு சண் மாஸ்டர் (வே.சண்முகராஜா) தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், லீனப்பு அருள்தாஸ், ரமேஷ் செல்வகுமார், பிரியா சிறீதரன், மணி நிலவன் அறிவுக்கரசு, இலக்குவன் சொக்கலிங்கம், தமிழினி வாமதேவன், வித்தியா நந்தகுமார், பிரேம்குமார் கந்தசாமி ஆகியோர் நூலாய்வுரை நிகழ்த்தவுள்ளனர்.

## ஆனைவாசல் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய தீ மிதிப்பு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**




கற்பிட்டி, ஆனைவாசல் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவ திருமுகமும் மகா நவராத்திரி விழாவும் கடந்த 03 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு தினசரி மாலை 05 மணிக்கு ஸ்நபனம், அபிஷேகம், அலங்காரம், வசந்த மண்டப பூஜை என்பன இடம்பெற்று வருகின்றன.

நவராத்திரி விழா நிகழ்வின் ஏழாம் நாள் புதன் (09) இரவு தீ ( பூ) மிதிப்பு சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வினை கற்பிட்டி இந்து ஆலயத்தின் பிரதம குரு கிரியா கிரமஜோதி, கிரியா தத்துவநிதி வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ ஸ்கந்த வரதேஸ்வரக் குருக்கள் நிகழ்த்தியதாக ஆலய நிர்வாக சபையின் தலைவர் ஜி. குபேந்திரன் தெரிவித்தார் .



அண்மையில் இடம்பெற்ற 2024 ம் ஆண்டுக்கான மாகாணமட்ட தமிழ் மொழித்தினப் போட்டியில் நாட்டார் பாடல் போட்டியில் கலந்து கொண்ட ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர். இவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு பாடசாலை சமூகம் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளது.

(படம்: உடப்பு குறூப் நிருபர்)

## சம்மாந்துறை காரைதீவு - அம்பாறை பிரதான வீதியில் ஏற்பட்ட நீர்க்கசிவு தொடர்பாக நீர்ப்பாவனையாளர்களுக்கு தெளிவூட்டல்

காரைதீவு அம்பாறை பிரதான வீதியின் சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியிலிருந்து அம்பாறை நகருக்கு செல்லும் பிரதான வீதியில் சுமார் ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் அண்மையில் ஏற்பட்ட நீர்க்கசிவு தொடர்பாக சமூக ஊடகங்களில் உண்மைக்கு புறம்பான செய்திகள் வெளிவந்ததையடுத்து, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது இச்சம்பவம் தொடர்பாக முழுமையாக ஆராய்ந்து அப்பகுதி நீர்ப்பாவனையாளர்களுக்கு உரிய முறையில் தெளிவூட்டல் வழங்கப்படுகின்றது.

இப்பிரதான வீதியினூடாக நீரை கொண்டு செல்கின்ற பிரதான பாரிய நீர்க்குழாய்கள், நீரை விநியோகிக்கின்ற குழாய்கள் உட்பட மொத்தமாக ஆறு குழாய்கள் செல்கின்றது. அதில் கைவிடப்பட்ட 225 மில்லி மீற்றர் பி.வி.சி குழாய்கள் இப்பிரதான பாதையின் உட்பகுதியில் ஆழத்தில் சுமார் 1000 மீற்றர் நீளத்தில் காணப்படுகின்றது.

சுமார் இரண்டரை மாதங்களுக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட இடத்தின் மேற்தரையில் இருந்து சிறியளவு நீர்க்கசிவு காணப்பட்டது. இக்கசிவினை சபையின் உரிய பகுதிக்கான நீர் வழங்கல் சபை உத்தியோகத்தர்கள் அவதானித்து இக்கசிவினை அடையாளம் காண அப்பகுதியில் தோண்டப்பட்டு இரண்டு நாட்கள் இக்குழி மூடப்படாமல் அவதானித்த போதும் நீர்க்கசிவு நிலத்திற்கு கீழ்ப்பகுதியில் கண்டறியப்படவில்லை. ஆனாலும் நிலத்திற்கு மேற்பகுதியில் நீர்கசிந்த நிலையில் காணப்பட்டது. இந்நிலையில் கசிவடையும் நீரில் குளோரின் அளவினை கண்டறிய அதற்கான பரிசோதனைகளும் செய்யப்பட்டது. ஆனால் அதில் குளோரின் ஏதும் தென்படவில்லை.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கை மூலம் நீர்க்கசிவானது கண்டுபிடிக்கப்படாமையினால் சபையின் உயரதிகாரிகளின் ஆலோசனைக்கமைவாக உயர் தொழிநுட்ப கருவிகளின் மூலம் நீர்க்கசிவினை கண்டறிவதற்கான ஆய்வுகள் ஜுன் மாதத்தில் மேற்கொள்ளப்பட்டாலும் அதிலும் நீர்க்கசிவிற்கான உரிய இடம் கண்டறியப்படவில்லை. இந்நிலையில் 2024 ஜுலை மாத நடுப்பகுதியில் இந்நீர்க் கசிவானது இல்லாமல் இருந்தது. இருப்பினும் ஜூலை மாத இறுதியில் அதே இடத்தில் புதிய நீர்க்கசிவுகள் கண்டறியப்பட்டது.

இக்கசிவின் மூலம் வீதி பாதிப்புக்குள்ளாகமல் இருக்க அதனை தவிர்க்கும் முகமாக இதன் மூலம் வெளிவரும் நீரை தற்காலிகமாக அருகிலுள்ள வடிகாலுக்குள் குழாய் ஒன்றின் மூலம் அனுப்புமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நீர் வழங்கல் சபையின் உரிய அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

அதற்கினங் நடைமுறைப்படுத்தப்பட்டு இக்குறித்த இடமானது தொடர்ச்சியாக நீர் வழங்கல் சபையினால் கண்காணிப்பு செய்யப்பட்ட வந்த நிலையில், 2024 செப்டெம்பர் 24 ஆம் திகதி நீர்க்கசிவில் அதிகரிப்பு ஏற்பட்டதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

அந்நீரானது சுத்திகரிப்பு செய்யப்பட்ட நீராக இருந்ததோடு, இக்கசிவானது ஏற்கனவே மேற்குறிப்பிட்ட கைவிடப்பட்ட குழாயிலிருந்து வெளிவந்த நீராகும் என்பது கண்டறியப்பட்டது.

ஏற்கனவே இவ்விடயத்தில் பெற்ற அனுபவத்தைக் கொண்டும், நீர்க்கசிவை இனம் காண்பதில் ஏற்பட்ட சிரமங்களையும் கருத்தில் கொண்டு கைவிடப்பட்ட 225 மில்லி மீட்டர் நீர்க்குழாயின் குறிப்பிட்ட பகுதியை நீர் வருவதை தடுப்பதற்காக செப்டெம்பர் 25 ஆம் திகதி தோண்டப்பட்டு மூடியிடப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக நீர்க்கசிவு முற்றாக நிறுத்தப்படவில்லை.

இப்பகுதி நீர்ப்பாவனையாளர்களுக்கு தடையின்றி இந்நீரை வழங்கும் நோக்கில் மறுநாள் (செப்டெம்பர் 26) இதனை சீர் செய்வதற்காக திட்டமிட்ட போது அத்தினத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை மின்சாரம் தடைப்பட்டிருந்தது. இதனால் குறித்த நீர் குழாய்களில் நீரற்ற நிலை காணப்பட்டதனால் நீர்க்கசிவின் உரிய இடத்தினை அடையாளம் காண்பதில் சிரமம் என்பதனால் திருத்த வேலை கைவிடப்பட்டது.

மேலும், பிரதான வீதிக்கு சேதம் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் உரிய நீர்க்கசிவு இடத்தினை கண்டறிய உயர் தொழிநுட்ப வசதிகளுடனான கருவிகளை கொண்டு 2024 செப்டெம்பர் 26 ஆம் திகதி நள்ளிரவில் உரிய இடம் கண்டறியப்பட்டு அது முழுமையாக வெற்றிகரமாக சீர் செய்யப்பட்டு பொது மக்களுக்கு எந்தவித தடையும் இல்லாமல் தொடர்ச்சியாக நீர் வழங்கப்பட்டது என்பதை நீர்ப்பாவனையாளர்களுக்கு இவ்வறிக்கை மூலம் தெளிவுப்படுத்தப்படுகின்றது.

# கொரோனா மையவாடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறக்கப்பட்ட பள்ளிவாசலும் பல்துறை கட்டடத் தொகுதியும்




மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஓட்டமாவடி மஜ்மா நகரில் அமையப் பெற்றுள்ள கொரோனா மையவாடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசலும் அதனுடன் கூடிய பல் துறை கட்டடத் தொகுதியும் அண்மையில் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக அதன் உரிமையாளர் ஏ.இஸட்.எம்.ஸவாஹிர் ஹாஜியாரினால் வக்பு பிரகடனம் செய்யப்பட்டது.

கொவிட் 19 என்னும் கொரோனா தொற்று 2019ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் உலகையே பெரும் கலக்குக் கலக்கி பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியான நிகழ்வு, உலக வரலாற்றில் கரும்புள்ளியாக பதிவாகியது. அதில் எமது இலங்கை தீவிலும் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

எமது நாட்டில் கொரோனா மேலும் பரவுவதை தவிர்ப்பதற்காக இலங்கையின் அப்போதைய அரசால் தன்னிச்சையாக பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன சுகாதாரப் பிரிவினரால் கொரோனா தொற்றினால் சம்பவிக்கும் சகல மரணங்களிலும் பூத உடல்களும் எரிக்கப்பட வேண்டும் என்ற சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அதற்கிணங்க முஸ்லிம் ஜனாஸாக்களும் மார்க்க விதிமுறையை மீறி எரிக்கப்பட்டன. உள்நாட்டிலும் வெளிநாடுகள் பலவற்றினதும் எதிர்ப்புக் காரணமாக பின்னர், குறிப்பிட்ட இடமொன்றில் நல்லடக்கம் செய்ய அரசு இணக்கத்திற்கு வந்தது. இலங்கையில் சில இடங்கள் சிபாரிசு செய்யப்பட்டு சில தரப்பினரால் எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்ட நிலையில் ஓட்டமாவடி மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்ய சம்பந்தப்பட்ட முஸ்லிம் நலன் விரும்பிகளால் சுமார் 17 விஸ்தீரணம் கொண்ட காணி கையளிக்கப்பட்டது.

கொரோனாவில் மரணமான சகல இன மதத்தவர்களின் சடலங்களும் 2021.03.04 ஆம் திகதி முதல் நல்லடக்கம் செய்யப்பட்டு வந்தன.

இந்த வரிசையில் 2022 மாதம் 10 ஆம் திகதி வபாத்தான பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த ஹாஜியாணி இரீபத்துல் ஹைறா என்பவரின் மரணமும் கொரோனா தொற்றினால் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டதன் விளைவாக, மஜ்மா நகர் மையாவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அடக்கத்திற்கு கிராம அடிப்படையில் வழங்கப்பட்ட இலக்கம் 3330 என நடப்பட்ட அடையாள கல்லில் பதிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் 2021 மார்ச் 4ஆம் திகதி முதல் 2022 மார்ச் 4ஆம் திகதி வரையில் மொத்தமாக 3634 பூதவுடல்கள் இங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 2985 பூதவுடல்கள் முஸ்லிம்களுடையதாகும்.293 பௌத்தர்களதும்.269 இந்துக்களதும்.86 கிறிஸ்தவர்களதும் சடலங்களாகும்.

17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மையவாடி காணியும் சுமார் 13 முஸ்லிம் குடும்பங்களுக்கு சொந்தமானவையாகும். இவை அப்போது குறிப்பிட்ட குடும்பங்களுக்கு சேனைப் பயிர்ச் செய்கை மூலம், வாழ்வாதாரத்திற்கு வருமானம் ஈட்டிக் கொடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இந்த உரிமையாளர்களுக்கு இதுவரையும் மாற்றுக்காணிகளோ நஷ்டஈடுகளோ வழங்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்டோர் தம் ஆதங்கங்களை வெளியிட்டு வருவதையும் கேட்க முடிகிறது.

ஏ.இஸட்.எம்.ஸவாஹிர் ஹாஜியார் மற்றும் அவரது பிள்ளைகளான பிரபல இரத்தினக்கல் வர்த்தகர்களான அஹ்சர் ஸவாஹிர், ரிகாஸ் ஸவாஹிர் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரால் பள்ளியும் பல் தேவை கட்டடங்களும் நிர்மாணிக்கப்பட்டு 2024 அக்டோபர் 1 ஆம் திகதி அஸர் தொழுகை நேரத்தில் உத்தியோகபூர்வமாக திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த வைபவத்தில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா முக்கியஸ்தர்களான பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாகிம் (அஸ்ஹரி) முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் பணிப்பாளர் எம்.எஸ்.எம் நவாஸ் உள்ளிட்ட பிரமுகர்கள், நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த உயர் அதிகாரிகள், ஆர்வலர்கள் என்று பெரும் திரளானோர் வருகை தந்திருந்தனர்.

அன்றையதினம் அஸர், மஃரிப், இஷா ஆகிய தொழுகைகளுக்காக பள்ளிவாசல் நிரம்பி இடமின்மை காரணமாக பல ஜமாத்களில் தொடர்ச்சியாக தொழுகைகள் நடத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இப்பள்ளியில் முதல் முதலாவதாக இடம் பெற்ற அஸர் தொழுகைக்கான அதான் சீனன் கோட்டை ஸஹ்ரான் முர்ஸியால் நிகழ்த்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பிரமுகர்கள் முக்கியஸ்தர்களால் கருத்துரை, வாழ்த்துரைகள் வழங்கப்பட்டன. அவற்றின் சுருக்கம் வருமாறு;

**பிரதேச சபை செயலாளர்**

கொரோனா மரணக்கிரியைகள் தொடர்பான பொறுப்பு வாய்ந்த இராணுவ அதிகாரி ஒரு பௌத்தராக இருந்தபோதும் அவரது தாயார் நல்லடக்கம் செய்ய வேண்டும் என்று பணித்திருந்தார். அதனால் கொரோனா மரணங்களையும் அவ்வாறு நிறைவேற்ற அனுமதி வழங்கப்பட்டது. அந்நிலையிலேயே மஜ்மா நகர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்த மையவாடி, விவசாயம் செய்யப்பட்டு ஏழைமக்களின் ஜீவனோபாயத்திற்கு கை கொடுத்துக் கொண்டிருந்த பூமியாகும். மையவாடியாக்கப்பட்டதை தொடர்ந்து இங்கிருந்த சிறு சிறு கட்டடங்கள் அகற்றப்பட்டன.

காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, கண்டி மாவட்டம், மத்திய மாகாணம் உள்ளிட்ட உலமா சபையினர் குறிப்பாக சகரியா மௌலவி, அப்ஸல் மரிக்கார் உள்ளிட்டோர் ஆரம்பத்தில் உதவிகளை வழங்கினர். இந்த வரிசையில் தான்



தற்போது சீனன்கோட்டை ஸவாஹிர் ஹாஜியார் குடும்பத்தினரால் மற்றொரு மைல்கல்லாக பள்ளியைச் சூழ பல்துறை கட்டடங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

அல்லாஹ் சிலரை கண்ணியப்படுத்துகிறான் சிலரை தாழ்த்தி விடுகிறான் இம்மையவாடியின் தோற்றத்தால் கல்குடா கண்ணியம் பெறுகிறது. இப்பகுதிக்கு இதுவரையில் வருகை தராதோரும் தரிசிக்க வருகிறார்கள். இப்பள்ளிக் கட்டடத்தால்





சீனன்கோட்டை ஜவாஹிர் ஹாஜியார் குடும்பமும் வரலாற்றில் இடம் பிடித்து அல்லாஹ்வின் கண்ணியத்திற்குரியவர்களாக உயர்வு பெறுகிறது.

**கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.ரீ.எம்.றிஸ்வி**

அல்குர்ஆன் இயம்பும் குகை வாசிகளின் வரலாற்று நினைவாக கட்டடம் அமையப் பெறுவது முக்கியத்துவம் பெறுகிறது. அதேபோன்று 'பைத்துல் ஹைறா' மஸ்ஜித் உள்ளிட்ட கட்டடத் தொகுதி நிர்மாணிப்பும் எதிர்காலத்தில் வரலாறாக விளங்கப் போகிறது. இதுவும் ஒரு சதக்கத்துல் ஜாரியாவாகும். நிலையான தர்மங்களில் ஒன்றாகும். 2021 இல் ஆரம்பமான இந்த இடம் 2024.10.01 அன்று மீண்டும் உயிர்ப்பிக்கப்படுகிறது.

**பிரதேச சபை செயலாளர் எம்.எஸ்.சிஹாப்தீன்**

இம் மையவாடி ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் நாம் சமூகத்துக்காக, அல்லாஹ்வுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வந்துள்ளோம். தூங்காத இரவுகள் பல. இராணுவ அதிகாரிகளிடமிருந்து அழைப்பு வந்த வண்ணமே இருக்கும் எமது குழு உடன் செயலில் இறங்கும்.

ஒரு ரமழான் மாதம் 27ஆம் நாள் புனித லைலத்துல் கதிர் இரவை ஹயாத்தாக்குவதற்காக அன்று இரவு 8:00 மணியுடன் எமது பணிகளை முடித்து பள்ளிகளில் ஆன்மிக கிரியைகளில் ஈடுபட்டிருந்தோம். ஆனாலும் ஜனாஸா அடக்க பணிகளுக்காக அழைப்புக்கு மேல் அழைப்பு வந்த வண்ணம் இருந்தது. ஜனாஸாவை அடக்க தாமதிக்கும் பட்சத்தில் மிக அவசரமாக அடக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானோம். எமது வணக்க வழிபாடுகளை கைவிட்டு இந்த கடமைக்கு முன்னுரிமை கொடுத்து செயலில் இறங்கினோம் நள்ளிரவு பன்னிரண்டு மணியையும் தாண்டி பணிகளில் ஈடுபட்டமை தியாகத்தின் உச்ச நிலை என்றே கூறலாம் நான் ஒருவன் தன்னந் தனியாக இருந்து இதனை சாதித்தமையை கூறிக் கொள்கிறேன் என்றார்.

சீனன்கோட்டை நன்கொடையாளர் ஏ.இஸட்.எம். ஸவாஹிர் ஹாஜியார் தனது ஏற்புரையில் கூறியதாவது கொரோனா தாண்டவம் ஆடிய காலகட்டத்தில் எமது சமூகம் பெரும் பீதியுடனும் நம்பிக்கையீனத்துடனும் திண்டாடிக் கொண்டிருந்தது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து வந்த அழுத்தங்கள் காரணமாக மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்ய பணிக்கப்பட்டமை குறித்து அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

மையவாடிக்குரிய விவசாய பூமியை தியாகத்துடன் தந்துதவிய மக்களுக்கும் இப்பகுதி மக்களுக்கும் அல்லாஹ் கிருபை செய்வானாக. உதாரணத்துக்கு மக்காவிலிருந்து மதீனா நகருக்கு இடம்பெயர்ந்த ரசூலு (ஸல்)க்கும் சஹாபாக்களுக்கும் நல்ல வரவேற்பளித்த மதீனாவாசிகள் வரலாற்றில் புகழ்படுவது போன்று ஓட்டமாவடி மக்களும் பாராட்டி புகழப்பட வேண்டியவர்களே. இலங்கை வரலாற்றில் மட்டுமின்றி உலக வரலாற்றிலும் கொரோனா மையவாடியான மஜ்மா நகர் நிச்சயம் சிறப்பாக இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

இப்பள்ளியின் நிர்மாணிப்போடு இப்பகுதி மேலும் செழிப்படையவே செய்யும். மேலும் இம் மையவாடிப் பகுதியைச் சுற்றி மதில் இடப்படும் தேவை உள்ளது. அத்துடன் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு எப்போதும் பிரகாசத்துடன் இருக்க வேண்டும்.

மிகவும் திறமை ஆற்றல் வாய்ந்த தக்வா தாரிகளை உள்ளடக்கிய சுமார் 20 பேர்களை கொண்ட நம்பிக்கையாளர் சபை ஒன்றும் உருவாக்கப்பட வேண்டும். இதில் உலமா சபை, முஸ்லிம் கலாசார திணைக்கள பிரதிநிதிகளும் உள்வாங்கப்பட்ட சபையாக இதனை பரிணமிக்கச் செய்வது சிறந்த நிர்வாகத்திற்கு வழிவகுக்கும். தற்போது 7 ஏக்கர் காணிகளே மையவாடிக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகள் எதிர்காலத்தில் பல்தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும் நம்பிக்கையாளர் சபையின் பொறுப்பில் இருக்கும்.

**பேருவளை பீ.எம்.முக்தார்**

---

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

**அருணாசலம் லெட்சுமணன் 51**

# மலேசியத் தமிழரின் ஏகோபித்த ஆதரவை பெற்ற தலைவராக அன்வர் இப்ராஹிம்!

11ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஜுலை 21.2023 சம்பிரதாயபூர்வமாக தொடங்கியது. இந்நிலையில் உத்தியோகபூர்வ தொடக்கம் என்றதொரு மரபு மலேசிய நாட்டில் பின்பற்றப்படுகின்றமை கவனிக்கத்தக்கது. இம் மாநாட்டோடு நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடத்தியதில் மலேசியா பெருமை கொள்கிறது. இவ்வாறு நடத்தப்பட்ட நான்கு மாநாடுகளிலும் அந் நாட்டில் பதவியில் இருக்கும் பிரதமர் கலந்துக்கொள்வது வழமையான விடயமாக அமையப்பெற்றுள்ளது. அவ்வாறு பிரதமர் பங்கேற்கும் நிகழ்வே உத்தியோகபூர்வ தொடக்க விழாவாக அழைக்கப்படுகிறது. அந் நடைமுறைக்கு அமைய சம்பிரதாய தொடக்கத்தின் அடுத்த நாளான 22ஆம் திகதியே மலேசிய நாட்டின் தற்போதைய பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கலந்துகொண்டார். இந் நிகழ்வு திட்டமிடப்பட்டிருந்த வகையில் மலாயா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் ஆயிரக் கணக்கானவர்கள் பங்கேற்றார்கள். தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை பெற்ற தலைவராக அன்வர் இப்ராஹிம் மதிக்கப்படுவதை அறிய முடிந்தது. இவரது காலத்தில் 523 தமிழ் பாடசாலைகள் மாத்திரம் இருந்த நிலையில் மேலும் நான்கு பாடசாலைகள் மீள தொடங்கப்பெற்றுள்ளது. தமிழ் மக்களின் கோரிக்கைக்கு பிரதமரின் செவிசாய்க்கும் தன்மையின் வெளிபாட்டின் விளைவு என்பதை தமிழர்கள் கூறி மகிழ்கிறார்கள்.

மாநாட்டில் பங்கேற்று தமிழ் மொழிக்கு பங்காற்றிய ஆளுமைகள் பிரதமர் அன்வர் இப்ராஹிமினால் கௌரவிக்கப்பட்டார்கள். ஏற்பாட்டுக் குழுவினால் மாநாட்டு மலர், நினைவுச் சின்னம் போன்றன வழங்கியதோடு பிரதமருக்கு கௌரவத்தினையும் வழங்கினார்கள். தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தங்கப் பதக்கம் அணிவித்து கௌரவித்தார். இப் பதக்கங்கள் ஓம்ஸ் பா. தியாகராஜாவினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மலேசியாவில் வாழும் இந்தியத் தமிழர்களின் நலன்கள் குறித்த கவனத்தில் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சரும், மாநாட்டின் தலைவருமான வ.சிவகுமார், பாராளுமன்ற உறுப்பினர் எம்.சரவணன், செனட்டர் சரஸ்வதி ஆகியோரின் கோரிக்கைகளை செவிமடுத்த நிலையில் அவற்றை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துவதாகவே அவரின் பதில்கள் அமைந்திருந்தன. தமிழ்க் கல்வி விருத்தி தொடர்பில் அத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கவனம் எடுப்பதாக உறுதியளித்தார். மலாயா பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வுத்துறை மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்வதாகவும் உறுதியளித்தார். இவ் உறுதிமொழிகளைத் தொடர்ந்து பிரதமருக்கு இடைவிடாத கரகோசத்தின் மூலமாக சபையோர் நன்றி தெரிவித்தார்கள்.

உலகில் அதிகாரத்தில் இருந்தவர்கள் தூஷிக்கப்பட்டும் எதிர்க்கட்சி செயற்பாட்டாளர்கள், ஆட்சிபீடம் ஏறியபோது ஆளுங்கட்சியில் இருந்தவர்களை சிறைவாசம் அனுபவிக்கச் செய்துள்ள சம்பவங்களை, உலகின் பல நாடுகள் அரங்கேற்றியுள்ளன. பாகிஸ்தானில் இவ்வாறான சம்பவங்கள் தொடர்த்தேர்ச்சியாக இடம்பெற்றுவந்தமை கவனிக்கத்தக்கது. குறிப்பாக இந்தியா தமிழகத்தில் தி.மு.க, அ.தி.மு.க கட்சிகளுக்கிடையே இவ்வாறான நிலைமைகளை கடந்த காலங்களில் அவதானித்திருக்கிறோம். அண்மையில் பங்களாதேஷில் ஆட்சியில் இருந்த பிரதமருக்கு எதிராக பொதுமக்கள் திரண்ட சம்பவமும் அவதானிப்பிற்குரியதாகும். அவ்வாறே இலங்கையில் கோட்டாபயவின் ஆட்சிக் கவிழ்ப்பும் விரட்டியடிப்பும் தந்த அனுபவமும் குறிப்பிடத்தக்கது.

உலக வரலாற்றில் சுதந்திர, வர்க்க, இன விடுதலை போராட்டங்களில் தலைமையேற்றவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி மனத் திடத்தை ஏற்படுத்துவதில் வாழ்க்கை துணையினரின் பங்களிப்பு மிகுந்த அவதானத்திற்குரியதாக விளங்கியுள்ளது. எடுத்துக்காட்டாக சீன விடுதலை போராளியான மாவோவுக்கு தனது காதலி தந்த உற்சாகத்தை அவரின் கவிதைகள் பதிவுகளாக்கியுள்ளன. அவ்வாறே அண்மைய காலத்தில் மலேஷியாவில் பெண்மணியொருவரின் முன்மாதிரி செயற்பாடு உலகளவில் கவனத்தை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்குறித்த அவதானத்திற்குரிய பெண் யாரென்று பார்க்கின்ற போது 11ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை உத்தியோகபூர்வமாக தொடக்கி வைத்த அன்வர் இப்ராஹிமின் பாரியாரே இப் பெருமைக்குரியவர் ஆகிறார். தற்போது ஆட்சியில் இருக்கும் கூட்டணியின் பிரதான கட்சியான மக்கள் நீதிக்கட்சியின் ஸ்தாபகர் டத்தோ ஸ்ரீ டாகடர் வான் அசீசா வான் இஸ்மாயில் ஆவார். இவர் பிரதமர் அன்வர் இப்ராஹிமின் துணைவாயார் ஆவார். இக் கட்சி உருவாக்கிய கால சூழ்நிலை தான் முக்கிய கவனத்தை ஈர்கின்றது. 1999ஆம்ஆண்டு மலேசிய நாட்டின் துணைப் பிரதமராக பதவியில் இருந்த நிலையில் ஊழல் குற்றச்சாட்டின் காரணமாக ஆறு வருடங்கள் சிறை தண்டனை அனுபவித்தார். இக் காலத்தில் அன்வர் இப்ராஹிமின் மனைவி கணவனின் விடுதலையை வேட்கையாக எண்ணி உருவாக்கப்பட்டதாகவே மக்கள் நீதிக் கட்சி விளங்குகிறது. அன்வரின் கைதை விரும்பாத பொதுமக்கள் கணிசமாக மக்கள் நீதிக்கட்சியில் அங்கத்துவம் பெற்றார்கள். இக் காலத்தில் இக் கட்சி உருவாக்கத்தில் அசீசா மிகுந்த சவாலை எதிர்நோக்கினார்.

2003ஆம் ஆண்டு மலேசிய மக்கள் கட்சியுடன் இணைந்து கூட்டணியை உருவாக்கினார்கள். இக் கூட்டணியை கெடிலான் கூட்டணி என அழைத்தார்கள். இத் தேர்தலில் ஒரேயொரு ஆசனத்தை மாத்திரம் கெடிலான் கூட்டணி பெற்றுக் கொண்டது. அடுத்து வந்த தேர்தல்களில் படிமுறை வளர்ச்சியை மக்கள் நீதிக் கட்சி பெற்றுக்கொண்டது. 2004இல் சிறையில் இருந்து அன்வர் இப்ராஹிம் விடுதலை பெற்றார். இந் நிலையில் விடுதலையின் பின்னர் ஐந்து வருடம்



அரசியலில் ஈடுபடக் கூடாது என்ற தடைவிதிப்புக்கு அமைய அத் தடை 2008 ஏப்ரல் மாதத்திலேயே நீக்கப்பட்டது. பெர்மாத்தாங் பாவ் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த நிலையில் தனது கணவரின் முழுமையான விடுதலையைத் தொடர்ந்து தான் அத் தொகுதியின் நாடாளுமன்ற பதவியை இராஜிநாமா செய்தார். எதிர்க் கட்சி தலைவர், துணை முதல்வர் என்ற அனுபவத்துடன் 2022ஆம் ஆண்டு தொடக்கம் மலேசிய நாட்டின் பத்தாவது பிரதமராக பதவியில் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அன்வர் இப்ராஹிம் மாணவர் பருவத்திலேயே பல ஆளுமைகளை வெளிப்படுத்தியதோடு தனது வாழ்வில் அவ்வப்போது சர்ச்சைக்குரிய குற்றச்சாட்டுகளை தன தாக்கிக் கொண்டவராக விளங்குகிறார். மாணவர் பருவம் தொடக்கமே பொது நல பேராட்டங்களுக்காக பல தடவைகள் சிறைவாசம் அனுபவித்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்வர் இப்ராஹிம் மலேசிய வரலாற்றில் கவனத்திற்குரிய ஆளுமையாகவே அவதானிக்கப்படுகிறார். அவரது வாழ்க்கை மிகுந்த சவால் மிக்கதாக அமைந்திருந்தது. மலேசிய தேசியப் பல்கலைக்கழகத்தில் இலக்கியத்தில் முதுநிலைக் கல்வியை கற்கும் போது மலேசிய உள்நாட்டு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். 1974இல் மலேசிய நாட்டில் ஏற்பட்டிருந்த வறுமை, பட்டினி நிலைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் போதே இவர் கைது செய்யப்பட்டார். சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இப் பட்டத்தை பெற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இளங்கலை பட்டத்தை மலாய் பல்கலைக்கழகத்தில் கற்கும் போதே முஸ்லிம் தேசிய மாணவர் சங்கத் தலைவராக செயற்பட்டதோடு, மலாய் மொழிச் சங்கத்தின் தலைவராகவும் செயலாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. எண்பதுகளின் ஆரம்பத்திலேயே மலேசிய இஸ்லாமிய இளைஞர்கள் அணியின் மூலமாக அம்னே அமைப்பில் இணைந்தார். அவ் அமைப்பில் குறுகிய காலத்திலேயே உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டார்.

அரசியல் ஈடுபாட்டில் 1983 தொடக்கம் அமைச்சு பதவிகளில் இணைந்துக்கொள்கிறார். இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, விவசாயத்துறை அமைச்சு, கல்வி அமைச்சு ஆகிய பதவி நிலைகள் அன்னாரின் ஈடுபாடு முக்கியத்துவம் பெறுகிறது. கல்வி அமைச்சராக தொழிற்பட்ட போது மலேசியாவின் கல்வி கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தேசிய மொழிக் கொள்கையில் மாற்றத்தை கொண்டு வந்தார். மலேசியா பகாசா என்பதில் இருந்து பகாசா மலாயு எனும் மாற்றத்தை ஏற்படுத்தினார். சர்வதேச தளத்தில் அன்வர் வகித்த பதவி நிலைகள் கவனத்திற்குரியனவாகும். யுனெஸ்கோ அமைப்பின் இருபத்தைந்தாவது மாநாட்டில் அதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1088இல் மலேசிய அனைத்துலக இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் இரண்டாவது நிலைத் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். அவ்வாறே 1980ல் கல்வி அமைச்சராக இருந்த போது மலேசிய கல்வி முறையை இஸ்லாமிய மயமாக்குவதில் முக்கிய பங்கை வகித்துள்ளார்.

1991இல் நிதி அமைச்சராக பதவி வகித்த போது மலேசியா பொருளாதாரம் துரித வளர்ச்சி கண்டுள்ளது. இக் காலத்தில் யுரோமணி அமைப்பின் கணிப்பில் உலகில் முதல் நான்கு நிதி அமைச்சர்களில் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு ஆசியமணி அமைப்பு 1996இல் ஆண்டின் சிறந்த நிதி அமைச்சராக தெரிவு செய்தது. அனைத்துலக நாணய நிதியத்தின் மேம்பாட்டுக் குழுவின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். மலேசிய நாட்டின் வரலாற்றில் மகாதீர் என்ற நாமம் முக்கியத்திற்குரிய ஆளுமையாக விளங்கியது. அவருடன் சிறிது காலம் நட்புடனும் பின்னர் எதிராகவும் செயற்பாடுகளை முன்னெடுத்தார். மகாதீரின் சர்வாதிகார போக்கு, குடும்ப அரசியல், ஊழல், நிதி மோசடி தொடர்பில் பகிரங்கமாகவே விமர்சித்தார். இருவருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்படலாயின. இந்தப் பின்னணியின் மூலமாக எழுந்த முரண்பாட்டு நிலையிலேயே அன்வர் தண்டிக்கப்பட்டார். பல சவால் நிலைகளுக்கு முகங்கொடுத்த நிலையிலேயே எதிர் நீச்சலோடு அன்வர் இப்ராஹிம் மீளவும் மலேசிய நாட்டின் தலைமைப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். இவரது மீள் வருகைக்கு அன்வரின் துணைவியாரின் ஒத்துழைப்பு என்பது மிக முன்மாதிரியாக நோக்கப்படுகிறது.

மாநாட்டு செயற்பாடுகளை ஆவணப்படுத்துவதில் செய்தி ஊடகங்கள் குறிப்பாக யூடியூப் தளங்கள் நிறையவே பங்களிப்பு செய்தன. இந்தியாவில் இருந்து பல செய்தி செனல்கள் பணியில் இருந்தன. இந்தியாவின் பிரபல தொலைக்காட்சி சேவைகளும் வருகை தந்தன. மலேசிய தொலைக்காட்சி, யூடியூப் தளங்களும் நிறையவே ஒலிபரப்புப் பணியில் ஈடுபட்டிருந்தன. அவற்றுள் இந்தியா சன் டிவி, மலேசியா நம்பிக்கை செனல், மைவெளிச்சம் போன்ற சேவைகள் என்னையும் நேர்காணல் செய்தன. அவ் வாய்ப்பின் போது "உலகத் தமிழர்கள் ஓர் அங்கமாக மலையகத் தமிழர்கள் விளங்குகிறார்கள். அச் சமூகம் பற்றிய வரலாறு வாழ்வியலை தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு வரலாற்றில் முதல் முறையாக பதிவு செய்தேன். என்பதோடு இச் சமூகம் பற்றிய கவனத்தை தெளிவாகவும் திடமாகவும் முன்வைத்தேன்."

அவ் அறிமுகத்தோடு மைவெளிச்சம் நிறுவனத்தின் நிறுவுனர் கணபதி அவர்களுடனான தொலைபேசி தொடர்பு தொடர்ந்த வண்ணம் காணப்படுகிறது. 2011ம் வருடம் தோற்றுவிக்கப்பட்ட இச் செயற்பாடு மலேசியா மட்டுமல்லாது உலகில் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் செல்வாக்கை பெற்று வருகிறது. யூடியூப் தளத்தில் தனக்கென ஓர் இடத்தை பிடித்தள்ளதில் நிறுவுனர் கனபதியின் பங்கு மிகுந்த பாராடிற்குரியதாக அமைகிறது. உலகத் தமிழர்களின் உறவுப் பாலத்தை மேலும் மேலும் அர்த்தப்படுத்தும் வகையில் மைவெளிச்சத்தின் ஏற்பாட்டில் தீப ஒளி எனும் சிறப்பிதழை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். அன்னாரோடு தொலைபேசி தொடர்பு மிக ஆரோக்கியமாக தொடர்கிறது.

**பயணம் தொடரும்...**

# அக்ரஹார உறுப்பினர் நலனுக்காக NITF உடன் கைகோர்க்கும் நவலோக

நவலோக மருத்துவமனை குழுமம் அக்ரஹார மருத்துவ காப்புறுதி திட்டத்தின் கீழ் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பல சலுகைகளை வழங்கும் நோக்கத்துடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. நோயாளிகளை மையமாகக் கொண்ட உயர்தர சுகாதார சேவையை வழங்குவதற்கான நவலோக மருத்துவமனை குழுமத்தின் அர்ப்பணிப்பு இதன் மூலம் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

அண்மையில் நடைபெற்ற விழாவில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன், நவலோக மருத்துவமனை குழுமத்தின் பணிப்பாளர்/பொது முகாமையாளர் பேராசிரியர் லால் சந்திரசேன மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பிரதம நிறைவேற்று



அதிகாரி கமனி என். லியனாராச்சி ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மேலும், தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் தலைவர் சாகல அபேவிக்ரம, உதவிப் பொது முகாமையாளர் (செயல்பாடுகள்) சமில் துஷார, உதவிப் பொது முகாமையாளர் (காப்புறுதி) நிமாலி பதிரண, உதவி முகாமையாளர் (சட்டம்) பிரதிபா வெலிகன்ன மற்றும் பதில் உதவி பொது முகாமையாளர் (நிதி) தம்மிக வீரகோன் ஆகியோர் கலந்து கொண்டனர். நவலோக மருத்துவமனை குழுமத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் ரசிகா திலகரத்ன மற்றும் உதவி முகாமையாளர் நிறுவன உறவுகள் துலன கலப்பத்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டாண்மை மூலம், காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அக்ரஹார உறுப்பினர்கள் சிறப்பு சுகாதார பலன்களைப் பெறவும், நவலோக மருத்துவமனை குழுமத்தால் வழங்கப்படும் பல சுகாதார சேவைகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். நவலோக மருத்துவமனை அவர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக நீண்டகால உறவை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயல்படுவதுடன், இது அந்த அர்ப்பணிப்பின் முக்கிய மைல்கல்லாக இதனைக் குறிப்பிட முடியும். குறிப்பாக, அரசு ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், குறைந்த விலையில் தரமான சுகாதார சேவையை அவர்களுக்கு வழங்குவதற்கும் நம்பகமான சுகாதார சேவை வழங்குநராக நவலோக மருத்துவமனை குழுமம் பெற்றுள்ள சிறப்பை இந்த ஒப்பந்தம் மேலும் உறுதிப்படுத்தும்.

தினகரன் வர்த்தக உலா

shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

## தமது முதலாவது உணவகத்தை திறக்கும் Food Studio

இலங்கையில் முன்னணி வகிக்கும் உணவு நிலைய முகாமைத்துவ நிறுவனமும் புத்தாக்கம்மிக்க உணவுக் கலைஞர்களுமான *Food Studio (Pvt) Ltd*, இலங்கையின் உணவுக் கலைத் துறையில் முன்னணி சக்தியாக தமது 6 வருடகாலத்தைக் கொண்டாடியதுடன், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தமது முதலாவது தனித்த உணவகத்தைத் திறப்பதாகவும் அறிவித்தது. இது நிறுவனத்தின் வளர்ச்சி மூலோபாயத்தில்; ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும், இது உணவு நிலைய முகாமைத்துவ நிறுவன நிலையிலிருந்து தனித்த உணவகத் துறைக்கு விரிவடைந்து, உலகெங்கிலும் இருந்து வரும் பயணிகளுக்கு நேரடியாக தமது பிரபலமான உணவு வகைகளை வழங்கிடும் வகையில் அமைக்கவுள்ளது.*PRIMO*




என்பது ஒரு தனித்துவமான, புதிய சப்ஸ் (*subs*), சாண்ட்விச்கள் மற்றும் பேகல்ஸ் உணவகம், இப்போது *BIA* பரபரப்பான புறப்பாடு/பயண மாற்ற நிலையத்தில் அமைந்துள்ளது. இது நிறுவனத்தின் உயர்தர, ஊட்டச்சத்து மிக்க மற்றும் மலிவான உணவுகளை வழங்குவதற்கான உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் கவனமாக உருவாக்கப்பட்ட உணவுப் பட்டியலை வழங்குகிறது.

# இலங்கையில் ADB வங்கி முன்னணி பங்குதாரர்: மீண்டும் கிரீடம் சூட்டப்பட்ட கொமர்ஷல் வங்கி

ஆசிய அபிவிருத்தி வங்கி (*ADB*) தொடர்ந்து நான்காவது ஆண்டாக வர்த்தகம் மற்றும் நிதி பரிவர்த்தனைகளுக்காக இலங்கையின் கொமர்ஷல் வங்கியை அதன் 'முன்னணி பங்குதாரர் வங்கியாக' கௌரவித்துள்ளது.

சிங்கப்பூரின் மாண்டரின் ஓரியண்டலில் நடைபெற்ற *ADB*யின் 10வது வர்த்தக மற்றும் விநியோகச் சங்கிலி நிதித் திட்ட (*TSCFP*) நிகழ்வில் தேசியப் பொருளாதாரத்திற்கு கொமர்ஷல் வங்கி வழங்கி வரும் வர்த்தகம் மற்றும் நிதிப் பங்களிப்புகளுக்காக இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.

2023 ஜூலை 1 மற்றும் 2024 ஜூன் 30 க்கு இடையில் இலங்கையின் வர்த்தகம் மற்றும் விநியோக சங்கிலி நிதிதளத்தில் அதிக எண்ணிக்கையிலான பரிவர்த்தனைகளை *ADB* உதவியுடன் கொமர்ஷல் வங்கி மேற்கொண்ட சாதனையானது அங்கீகரிக்கப்பட்டது. *ADB TSCFP* விருதுகள் விழாவில் கொமர்ஷல் வங்கி 36 கௌரவமிக்க விருதுகளுடன் அங்கீகரிக்கப்பட்ட 31 வங்கிகளில்



ஒன்றாகும். *ADB* ஆனது எங்களின் மிகவும் கௌரவமிக்க பங்காளர்களில் ஒன்றாகும், மேலும் கொமர்ஷல் வங்கியை இலங்கையின் மிகப் பாரிய வர்த்தக வசதியாளர்களில் ஒன்றாக மாற்றுவதற்கு *ADB* வழங்கிய பங்களிப்பை நாங்கள் பெரிதும் பாராட்டுகின்றோம்' என வங்கியின் உதவி பொது முகாமையாளர் பெருநிறுவன வங்கி பி. ஏ. எச். எஸ். ப்ரீனா தெரிவித்தார். 'கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் இருவரையும் வர்த்தகம் தொடர்பான அபாயங்களிலிருந்து பாதுகாக்கும் நுட்பங்கள் மற்றும் கருவிகளை *ADB* எங்களுக்கு வழங்குகிறது, இதன் மூலம் ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை செய்யும் வர்த்தகங்களை ஆதரிக்கிறது. இந்த விருது இந்த துறையில் எங்கள் உறவின் வெற்றியை வெளிப்படுத்துகிறது. கொமர்ஷல் வங்கி இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறை வங்கி மற்றும் உலகின் சிறந்த 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கை வங்கியாகும். கொமர்ஷல் வங்கி திறன்மிகு முறையில் அமையப்பெற்ற கிளை வலையமைப்புக்கள் மற்றும் 974 தானியங்கி இயந்திரங்களை கொண்டு இயங்குகின்றது.

கொமர்ஷல் வங்கி இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறைக்கு பாரிய கடனுதவி வழங்குவதோடு நாட்டின் வங்கித் துறையில் டிஜிட்டல் புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது. வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகள் பங்களாதேஷை உள்ளடக்கியது, அங்கு வங்கி 20 கிளைகளை இயக்குகின்றது: மியன்மார் நய் பியி தாவில் நுண்நிதி நிறுவனத்தினை கொண்டுள்ளது.

# SDB வங்கி புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக கபில ஆரியரத்ன நியமனம்

*SDB* வங்கியின் புதிய நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கபில ஆரியரத்ன நியமிக்கப்பட்டுள்ளதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைவதாக அவ்வங்கி அறிவித்துள்ளது. நிதித் துறையில் விரிவான அனுபவமுள்ள பிரபல வங்கியியல் நிபுணரான ஆரியரத்ன, *SDB* வங்கியின் இலட்சியப் பயணத்தை புத்தாக்கம், வளர்ச்சி மற்றும் மாற்றம் ஆகியவற்றின் ஊடாக இலங்கையின் நிதித் துறையில் ஒரு முக்கிய பங்காளராக நிலைநிறுத்துவதற்கு தயாராக உள்ளார்.

*SDB* வங்கியானது, கூட்டுறவுத் துறை மற்றும் சிறிய, நடுத்தர தொழில்முனைவோருக்கு (*SME*) சேவை செய்யும் வலுவான அடித்தளத்துடன், அதன் மூலோபாயத்தின் மையத்தில் தொழில்நுட்பத்தை இணைத்து தனது வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கமான தீர்வுகளை அறிமுகப்படுத்தி, நாடு முழுவதும் முக்கிய விரிவாக்கத்தை மேற்கொள்ள தயாராக உள்ளது. ஆரியரத்னவின் இணைவானது சந்தேகத்திற்கு இடமின்றி இந்த வளர்ச்சிக்கான நிகழ்ச்சி நிரலை விரைவுபடுத்த தேவையான உத்வேகத்தை வழங்கும் என்பதோடு, வங்கியின் நிலைத்தலுக்கும், வங்கியியல் தயாரிப்புகளை மேம்படுத்தும் நிபுணத்துவம் மற்றும் தொலைநோக்கு கொண்ட தலைமைத்துவத்தின் சிறப்பையும் வழங்கும்.



மாற்றத்தை முன்னெடுப்பதானது ஆரியரத்னவுக்கு ஒரு புதிய விடயமல்ல. ஒரு தசாப்தத்திற்கும் மேலாக செலான் வங்கி பிஎல்சியின் பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றிய அவர், மாற்றங்களை முன்னெடுத்து வளர்ச்சியின் முக்கியமான காலகட்டங்களில் நிறுவனத்தை வெற்றிகரமாக வழிநடத்தினார். அவரது ஆழ்ந்த நிபுணத்துவம், பெருநிறுவன ரீதியிலும் வங்கியியல், வணிக வங்கி, அபிவிருத்திக் கடன் ஆகிய துறைகளில் *Nations Trust Bank PLC, People's Bank PLC, ABN Amro Bank, Arab National Bank (Saudi Arabia), Mashreq Bank* போன்ற மதிப்புமிக்க நிறுவனங்கள் மேம்படுவதற்கு தலைமைப் பதவிகளில் இருந்து வழிகாட்டியுள்ளார். உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக அவர் கொண்டுள்ள விரிவான அனுபவமானது *SDB* வங்கியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு உறுதுணையாக அமையும்.

# சட்டத்தரணிகள் சங்க தலைவராக போட்டியிடும் ரஜீவ் அமரசூரிய



இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 2025/2026 ஆம் ஆண்டுக்கான தலைவர் பதவிக்கு, மாசி மாதம் 2025 இல் திட்டமிடப்பட்டுள்ள தேர்தலில் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய போட்டியிடவுள்ளார்.

அமரசூரிய 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 83% வாக்குகள் பெற்று பெரும்பான்மையுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்க செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 2020 பங்குனி 28ஆம் திகதி நடைபெறவிருந்த இலங்கை சட்டத்தரணிகள் சங்க வருடாந்த மாநாட்டில் 24வது செயலாளராக பொறுப்பேற்கவிருந்த நிலையில், Covid19 பெருந்தொற்றால் ஏற்பட்ட முதலாவது ஊரடங்கின் போது தனது பதவியை ஆரம்பிக்க நேர்ந்தது.

2020 – 2022 காலப்பகுதியில் செயலாளராக கடமையாற்றிய அமரசூரிய, பெருந்தொற்றும் பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்ட இக்கட்டான காலத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு தனது பன்முகத் திறன்களை கொண்ட தலைமைத்துவத்தை வழங்கியமைக்காக அவருக்கு பல பாராட்டுக்கள் கிடைத்திருந்தது.

நவீன தொழில்நுட்பம் மற்றும் புதுமையான முறைகளைப் பயன்படுத்தி பல புதிய முயற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியதுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வழமையான செயல்பாடுகளை முற்றிலும் மாற்றியமைத்ததோடு, சிறப்பாக வழிநடாத்தினார்.

மேலும் அவர் தொடர்ச்சியான சட்டக் கல்வி மற்றும் தொழில்முறை மேம்பாட்டிற்கான புதிய திட்டங்களை அமுல்படுத்தியதற்காக அதிகளவில் பாராட்டப்பட்டார்.

இதன் மூலம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சேவையானது தேசிய மட்டத்தில் அனைத்து உறுப்பினர்களிடமும் அவர்களின் இருப்பிடத்தை பொருட்படுத்தாமல் சென்றடைந்தது.

அவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்க இணையவழி கருத்தரங்கு தொடரை மூன்று மொழிகளிலும் அறிமுகப்படுத்தி நடத்தியதோடு 500க்கு மேற்பட்ட வளவாளர்களின் பங்களிப்புடன் 175 இணையவழி கருத்தரங்குகளை இரண்டாண்டு காலத்தில் சிறப்பாக நிறைவேற்றினார்.

இக்கருத்தரங்குகள் இன்றுவரை இலங்கை சட்டத்தரணிகள் சங்க YouTube தளத்தில் பொதுமக்கள் பாவனைக்கென வெளிப்படையாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

# வட மத்திய மாகாணத்திலும் பெண் தொழில்முனைவோரை வலுவூட்டும் தீவா

தீவா கரத்திற்கு வலிமை மகளிர் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டம் ஆனது, *Women in Management (WIM)* மற்றும் *Hemas Consumer Brands* நிறுவனத்தின் முதன்மையான சலவை பராமரிப்பு வர்த்தகநாமமான தீவாவின் கூட்டு முயற்சியாகும். 150 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் 6ஆவது பிராந்திய நிகழ்வானது 2024 ஒக்டோபர் 07ஆம் திகதி அநுராதபுரத்தில் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

நுவரகம் பலாத்த மத்திய பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இது தொடர்பான முழு நாள் கருத்தரங்கானது, தொழில் முயற்சியாளர்கள் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான அறிவு, திறன் மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றுடன் பெண் தொழில்முனைவோரை தயார்படுத்தியது.

வடக்கு, வடமேல், தென், ஊவா, மத்திய மாகாணங்களை உள்ளடக்கியவாறு இலங்கை முழுவதிலும் உள்ள பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் வெற்றிகரமான தொடராக இடம்பெற்ற இந்நிகழ்வானது, மற்றுமொரு மைல்கல்லாக அமைந்தது. இந்த கருத்தரங்கின் போது, பங்கேற்பாளர்கள் வணிகப் பதிவு, நிதி முகாமைத்துவம், வாடிக்கை





யாளர் பராமரிப்பு, விலை வியூகங்கள், வர்த்தகநாம பிரபலப்படுத்தல் மற்றும் பொதியிடல் போன்ற அத்தியாவசிய தொழில் முனைவோர் திறன்கள் தொடர்பான அறிவைப் பெற்றனர். ஒன்லைன் சந்தைகளிலும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதோடு, மிகவும் போட்டி நிறைந்த டிஜிட்டல் துறையில் சிறு வணிகங்களை மேம்படுத்துவதிலும் பெறுமதி வாய்ந்த நுண்ணறிவுகளை இது வழங்கியது.

*Hemas Consumer Brands* நிறுவனத்தின் வீட்டு பராமரிப்பு பிரிவின் முகாமையாளர் நாமல் பெனாண்டோ, இது தொடர்பில் தனது கருத்துகளை பகிர்ந்துகொண்டபோது, "தனது வர்த்தகநாமத்தின் நோக்கத்திற்கு உண்மையாக இருந்து, 'தீவா கரத்திற்கு வலிமை பெண்கள் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டம்' மூலம் நாடளாவிய ரீதியில் உள்ள பெண் தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டுவதில் முக்கிய பங்காற்றியுள்ளது. இத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளதோடு, எதிர்காலத்தில் மேலும் அதிகமான பங்கேற்பாளர்கள் இத்திட்டத்தில் இணைவார்கள் என நம்புகிறோம்.

இந்தத் திட்டமானது, பங்கேற்பாளர்களுக்கு மாத்திரமல்லாது, அவர்களின் குடும்பங்கள், உள்ளூர் சமூகங்கள் மற்றும் அந்தந்த மாவட்டத்தின் பொருளாதாரத்தை தன்னிறைவு அடையச் செய்வதற்கு பெரிதும் உதவும் என நாம் நம்புகிறோம்" என்றார். தீவா கரத்திற்கு வலிமை திட்டமானது, தொடர்ச்சியாக வாழ்க்கையை மாற்றியமைப்பதற்கும் அதனை மேம்படுத்துவதற்கும் பெண்களை உற்பத்தியாளர்கள் எனும் நிலையிலிருந்து வெற்றிகரமான வணிக உரிமையாளர்களாக உருமாற்றவும் உதவுகிறது. ஏற்கனவே இடம்பெற்ற நிகழ்வுகளைப் போலவே, இந்த நிகழ்ச்சியும் நிலைபேறான வணிகங்களை உருவாக்குவதற்குத் தேவையான ஆதாரங்களை பங்கேற்பாளர்களுக்கு வழங்கியதோடு, பொருளாதார நிச்சயமற்ற நிலைக்கு மத்தியில் அவர்களது எதிர்கால நிதி நிலைமையை கட்டுப்படுத்துகிறது.

# DFCC வங்கி, BestWeb.LK 2024 விருதுகள் நிகழ்வில் உச்ச விருதுகளை தனதாக்கியுள்ளது

டிஜிட்டல் புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட வங்கிச்சேவை தீர்வுகள் ஆகியவற்றில் முன்னோடியான *DFCC* வங்கி, *LK Domain Registry* ஆல் நடத்தப்பட்ட 14வது *BestWeb. LK Awards 2024* விருதுகள் நிகழ்வில் வெற்றியீட்டியுள்ளது.

மிகச் சிறந்த வங்கிச்சேவை இணையத்தளத்திற்கான (*Best Banking Website*) பெருமதிப்பிற்குரிய தங்க விருது மற்றும் வங்கிச்சேவைப் பிரிவில் மிகச் சிறந்த மொபைல் பயனர் அனுபவத்திற்கான (*Best Mobile User Experience in the Banking Category*) சிறப்பு விருது ஆகியவற்றை வென்று இவ்வங்கி வரலாறு படைத்துள்ளது. மேலும், இந்த வெற்றிகளுடன், *BestWeb.LK*



*Awards 2024* நிகழ்வில் 22 பிரிவுகள் மத்தியில் ஒட்டுமொத்த வெள்ளி விருதிற்கான கௌரவமும் *DFCC* வங்கிக்கு கிடைத்துள்ளதுடன், இலங்கையில் மிகவும் டிஜிட்டல் வழிமுறை கொண்ட மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய வங்கிகளுள் ஒன்று என்ற தனது ஸ்தானத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இவ்விருதுகள் மற்றும் வங்கியின் டிஜிட்டல் பரிமாண மாற்றம் குறித்து கருத்து வெளியிட்ட *DFCC* வங்கியின் உப தலைவரும், டிஜிட்டல் சந்தைப்படுத்தலுக்கான தலைமை அதிகாரியுமான தினேஷ் ஜெபமணி அவர்கள், "*BestWeb.LK 2024* விருதுகள் நிகழ்வில் பெருமதிப்பிற்குரிய இவ்விருதுகளை வென்றுள்ளமை *DFCC* வங்கிக்கு மிகவும் பெருமைமிக்க சாதனையாக மாறியுள்ளதுடன்,

இவ்விருதுகள் நிகழ்வில் கடந்த காலங்களில் நாம் ஈட்டியுள்ள வெற்றிகளை அத்திவாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இவை எமது முயற்சிகளுக்கான வெகுமதியாக அமைந்துள்ளதுடன், எமது வாடிக்கையாளர்களின் பரிமாண மாற்றம் கண்டு வருகின்ற தேவைகளை நிறைவேற்றுவதில், ஒப்பற்ற டிஜிட்டல் அனுபவங்களை வழங்குவதில் எமது அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கின்றன.

நாம் தொடர்ந்தும் புத்தாக்கத்தை முன்னெடுக்கும் சமயத்தில், வாடிக்கையாளர்களின் திருப்தியை மேம்படுத்தி, அனைத்து பிரிவுகள் மத்தியிலும் டிஜிட்டல் வழிமுறைகளை உள்வாங்குவதை முன்னெடுப்பதில் கவனம் செலுத்துவோம்," என்று குறிப்பிட்டார்.

*BestWeb.LK Awards 2024* நிகழ்வில் முதல்முறையாக இந்த விருது அங்கீகாரங்களைப் பெற்றுள்ளமை தலைசிறந்த டிஜிட்டல் அனுபவங்களை வழங்குவதில் *DFCC* வங்கி மகத்துவத்தின் மீது இடைவிடாத நாட்டம் கொண்டுள்ளதை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. மிகச் சிறந்த வங்கிச்சேவை இணையத்தளத்திற்கான தங்க விருதை வென்றுள்ளமை, பயனர் ஈடுபாட்டை மேம்படுத்தி, நிதியியல் சேவைகளுக்கு எளிமையான அணுகலை வழங்கும் நவீன, பயனர்நேய இடைமுகத்தைத் தோற்றுவிப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது.

மிகச் சிறந்த மொபைல் பயனர் அனுபவத்திற்கான சிறப்பு விருது ஸ்மார்ட்போன் பயனர்களுக்கு மொபைல் அனுபவத்தின் உச்சத்தை வழங்கி, தங்குதடையின்றிய மேம்படுத்தப்பட்ட அணுகலை வழங்குவதில் அதன் முயற்சிகளுக்கான அங்கீகாரமாகக் காணப்படுகின்றது. *DFCC* வங்கியின் விருதை வென்றுள்ள இணையத்தளம் டிஜிட்டல் இடமளிப்பு மூலமாக நிதியியல் அரவணைப்பு உள்ளடக்கத்திற்கு ஆதரவளிப்பதில் அதன் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியுள்ளது.

20 வயதுக்கு உட்பட்ட மத்திய ஆசிய கரப்பந்தாட்டப் போட்டி

# உஸ்பகிஸ்தான் அணியுடனான போட்டியிலும் இலங்கை தோல்வி

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றுவரும் 20 வயதுக்கு உட்பட்ட மத்திய ஆசிய கரப்பந்தாட்டப் போட்டியில் நேற்று (11) நடந்த உஸ்பகிஸ்தான் அணிக்கு எதிரான ஆரம்ப சுற்றின் கடைசி குழுநிலைப் போட்டியிலும் இலங்கை அணி 1–3 என்ற அடிப்படையில் தோல்வியை சந்தித்தது. ஏற்கனவே இலங்கை அணி இந்தத் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்துள்ளது.

இந்நிலையில் நேற்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமான உஸ்பகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் இலங்கை அணி முதல் இரு சுற்றுகளிலும் மோசமான பின்னடைவைச் சந்தித்தது. ஆரம்ப சுற்றில் ஆதிக்கம் செலுத்திய உஸ்பகிஸ்தான் அணி அதனை 25–17 என கைப்பற்றியதோடு அடுத்த சுற்றையும் 25–18 என வென்றது.

எனினும் மூன்றாவது சுற்றில் கடுமையாக போராடிய இலங்கை வீரர்கள் அந்த சுற்றை 25–21 என வென்று நம்பிக்கை தந்தனர். அடுத்த சுற்றிலும் இலங்கை வீரர்களால் உஸ்பகிஸ்தான் அணிக்கு நெருக்கடி கொடுக்க முடிந்தது.

என்றாலும் அவர்கள் அந்த சுற்றை 23–25 என இழந்து போட்டியில் தோல்வியை சந்தித்தனர்.

இந்தத் தொடரில் இலங்கை அணி ஆரம்ப சுற்றில் ஆடிய நான்கு போட்டிகளில் ஒன்றில் மாத்திரமே வெல்ல முடிந்தமை குறிப்பிடத்தக்கது.



## இன்னிங்ஸினால் தோற்று பாக். மோசமான சாதனை



டெஸ்ட் வரலாற்றில் முதல் இன்னிங்ஸில் 500க்கும் மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றும் போட்டியில் இன்னிங்ஸால் தோல்வியைச் சந்தித்த மோசமான சாதனை ஒன்றை பாகிஸ்தான் அணி படைத்துள்ளது.

முல்தானில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ஐந்தாவது நாளான நேற்று பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் மற்றும் 47 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தே இந்த சாதனையை படைத்துள்ளது.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸுக்கு 556 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து இங்கிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 7 விக்கெட் இழப்புக்கு 823 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதன்போது ஹரி ப்ரூக் 317 ஓட்டங்களையும் ஜோ ரூட் 262 ஓட்டங்களையும் பெற்றதோடு இருவரும் நான்காவது விக்கெட்டுக்கு 454 என்ற சாதனை இணைப்பாட்டத்தைப் பெற்றனர்.

இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 267 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் பாகிஸ்தான் அணி 220 ஓட்டங்களுக்கு சுரண்டது. பாகிஸ்தான் தனது சொந்த மண்ணில் கடந்த 11 டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றி பெறத் தவறி இருப்பதோடு இதில் ஏழு போட்டிகளில் தோல்வியை சந்தித்துள்ளது.

## பாக். சுரங்க பணியாளர் 20 பேர் சுட்டுக் கொலை



தென்மேற்கு பாகிஸ்தானின் பலுகிஸ்தான் மாகாணத்தில் உள்ள நிலக்கரி சுரங்கம் ஒன்றில் துப்பாக்கிதாரிகளால் 20 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நிலக்கரி சுரங்கப் பணியாளர்களின் தங்குமிடத்திற்குள் நேற்றுக் காலை நுழைந்த தாக்குதல்தாரிகள் பணியாளர்களை சுற்றிவளைத்து சூடு நடத்தியுள்ளனர். டுக்கி மாவட்டத்தில் உள்ள மருத்துவமனை ஒன்றுக்கு 22 சடலங்கள் வந்திருப்பதோடு ஆறு பேர் சிகிச்சை பெற்று வருவதாக அங்குள்ள ரோய்ட்டர்ஸ் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பணியாளர்கள் ரொக்கெட்டுகள் மற்றும் கையெறி குண்டுகள் போன்ற கனரக ஆயுதங்களால் தாக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தாக்குதல்தாரிகள் சுரங்கத்தின் இயந்திரங்கள் மீது தீ வைத்துள்ளனர்.

இந்தத் தாகுதலுக்கு உடன் எந்தத் தரப்பும் பொறுப்பேற்காதபோதும், பிரிவினைவாத பலுகிஸ்தான் விடுதலைப் படை மாகாணத்தில் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச செய்திகள்

# அணு குண்டில் உயிர்பிழைத்தோர் அமைப்புக்கு அமைதிக்கான நோபல்

ஜப்பான் மீது நடத்தப்பட்ட அணுகுண்டு தாக்குதலில் உயிர்பிழைத்தவர்களுக்கான ஜப்பானிய அமைப்பான நிஹான் ஹிடாங்கியோவுக்கு இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்கள் இல்லாத உலகை அமைப்பதற்கான கடும் முயற்சிகளை மேற்கொண்டுவருவதற்காகஅமைதிக்கான நோபல் பரிசு பெற இந்த அமைப்பு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகியில் அணுகுண்டு வீச்சில் உயிர் தப்பி ஆனால் மரணத்தை விடவும் பாதிக்கப்பட்டோரின் நலனுக்காகவும், அணுகுண்டு இல்லாத உலகை உருவாக்கவும் நிஹோன் ஹிடாங்க்யோ



அமைப்பு தொடர்ந்து பணியாற்றி வந்துள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் கடந்த திங்கட்கிழமை முதல் அறிவிக்கப்பட்டு வருகின்றன. மருத்துவம், பௌதீகவியல், இரசாயனவியல், மருத்துவம், இலக்கியம் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு மிக உயரிய விருதான நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்று (11) அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் போர் மேகம் சூழ்ந்திருக்கும் நிலையில், ஏற்கனவே அணு குண்டு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

நோர்வே நோபல் குழுவின் தலைவரான ஜோர்கன் வாட்னே ஃப்ரைட்னெஸ், இந்த விருது அறிவிப்பு குறித்து கூறுகையில், அணு ஆயுத பயன்பாட்டுக்கு எதிரான போராட்டங்களுக்கு தற்போது கடுமையான அழுத்தம் இருப்பதால், அந்த அமைப்புக்கு நோபல் விருது வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## பங்களாதேஷை பாகுபாடற்ற நாடாக மாற்ற வலியுறுத்து



வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கொள்கைகளின் அடிப்படையில் பாகுபாடுகள் அற்ற தேசமாக பங்களாதேஷ் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று பங்களாதேஷ் ட்ரான்ஸ்ரேன்சி இன்டர்நெஷனல் நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

பன்மைத்துவத்திற்கு எதிராக வெறுப்பு மற்றும் விரோதத்தைப் பரப்புவதற்கான முயற்சிகளுக்கு இடமளிக்கக்கூடாது என அந்நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் இப்தேகாருஸ்ஸமான் கேட்டுள்ளார். பங்களாதேஷில் பல்கலைக்கழக மாணவர்கள் பல வாரங்களாக முன்னெடுத்த போராட்டத்தின் ஊடாக முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதோடு நோபல் பரிசு பெற்ற முஹம்மது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# லெபனானில் ஐ.நா. நிலைகள் மீதும் இஸ்ரேல் தாக்குதல்: பெய்ரூட் தாக்குதலில் 22 பேர் பலி

தெற்கு லெபனானில் ஐ.நா. அமைதிகாக்கும் படையினர் பயன்படுத்தும் கண்காணிப்பு கோபுரம் ஒன்றின் மீது இஸ்ரேலிய படையினர் நேற்று (11) தாக்குதல் நடத்தியதில் இருவருக்கு காயம் ஏற்பட்டதாக ஐ.நா. தரப்பு தெரிவித்துள்ளது. ஹிஸ்புல்லாவுடன் போர் புரிந்து வரும் இஸ்ரேலியப் படை, அமைதிகாக்கும் வீரர்கள் மீது தொடர்ச்சியாக மூன்றாவது நாளாகவே தாக்குதல் நடத்தியுள்ளது.

லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் மையப் பகுதி மீது இஸ்ரேல் கடந்த வியாழக்கிழமை இரவு நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் 22 பேர் கொல்லப்பட்டு 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்ததாக லெபனான் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதில் ஹிஸ்புல்லா மூத்த அதிகாரி ஒருவரான வபீக் சபா என்பவரை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும் அவர் உயிர் தப்பியதாக மூன்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஹஸ்புல்லா அமைப்பு வீசிய பீராங்கி எதிர்ப்பு ஏவுகணை ஒன்று விவாசய நிலப்பகுதியில் விழுந்ததில் வடக்கு இஸ்ரேலில் தாய்லாந்து பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் அம்புலன்ஸ் சேவை தெரிவித்தது. வடக்கு இஸ்ரேலில் ரபோட் நப்டாலி பகுதிக்கு பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாக ஹிஸ்புல்லா கமாண்டர் ஒருவரை இஸ்ரேலிய விமானப்படை கொன்றதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.



இது தொடர்பில் ஹிஸ்புல்லா தரப்பில் உடன் எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

காசாவில் போர் ஆரம்பித்ததை அடுத்து பலஸ்தீனின் ஹமாஸ் போராளிகளுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்தே இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையிலான மோதல் அரம்பித்தது. கடந்த ஓர் ஆண்டாக இரு தரப்பும் பரஸ்பரம் தாக்குதல் நடத்தி வந்த நிலையில் தற்போது மோதல் உக்கிரம் அடைந்துள்ளது.

ஹிஸ்புல்லா வலுவாக இருக்குத் தெற்கு லெபனான், பெய்ரூட்டின் தெற்குப் புறநகர்கள் மற்றும் பக்கா பள்ளத்தாக்கு பகுதிகளில் இஸ்ரேல் சரமாரித் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இதில் ஹிஸ்புல்லா தலைவர்கள் பலர் கொல்லப்பட்டிருக்கும் நிலையில் தெற்கு லெபனான் பகுதியிக்குள் இஸ்ரேலிய தரைப்படை நுழைந்துள்ளது.

இந்நிலையில் தெற்கு லெபனானின் நகூரா சிறு நகரில் இருக்கும் ஐ.நா. அமைதிகாக்கும் படைகளின் பிரதான முகாமில் உள்ள அமைதிகாப்பாளர்களின் கோபுரம் இஸ்ரேலின் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளது. அதே முகாமில் இருக்கும் கண்காணிப்பு கோபுரத்தின் மீது இஸ்ரேலிய டாங்கி ஒன்று சூடு நடத்தியதில் அது வீழ்த்தப்பட்டிருப்பதோடு இரு அமைதிகாப்பாளர்கள் காயமடைந்ததாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இஸ்ரேலியப் படை நேற்று மற்றொரு ஐ.நா. அமைதிகாக்கும் முகாமின் சுற்றுப்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்ததாக ஐ.நா. தரப்பு குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக மோதல் தீவிரம் அடைந்திருப்பதால் ஆபத்தைத் தவிர்ப்பதற்கு ஐ.நா அமைதிகாக்கும் படையினர் வடக்காக 5 கிலோமீற்றர் தமது நிலையை மாற்றும்படி ஐ.நாவுக்கான இஸ்ரேலிய தூதுவர் டன்னி டனோன் கடந்த வியாழக்கிழமை கேட்டிருந்தார்.

நகூரா பகுதியில் ஐ.நா. அமைதிகாக்கும் முகாமுக்கு அருகில் துருப்புகள் படை நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக இஸ்ரேல் இராணுவம் வியாழனன்று குறிப்பிட்டிருந்தது.

லெபனானில் உள்ள 10,400க்கும் அதிகமான அமைதிகாக்கும் படையினரின் பாதுகாப்பு ஆபத்தில் இருப்பதாகவும் செப்டெம்பர் பிற்பகுதியில் இருந்து அவர்களின் நடவடிக்கைகள் கிட்டத்தட்ட நிறுத்தப்பட்டிருப்பதாகவும் ஐ.நா. அமைதிகாக்கும் படைகளின்தலைவர் ஜீன் பீரே லக்ரொயிக்ஸ் கடந்த வியாழக்கிழமை பாதுகாப்புச் சபையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கடந்த செப்டெம்பர் நடுப்பகுதில் போர் தீவிர அடைந்த பின்னர் மூன்றாவது முறையாகவே பெய்ரூட் மையப்பகுதி மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் வான் தாக்குதல் நடத்தியது.

மக்கள் நிரம்பியிருந்த பகுதி மீது முன்னெச்சரிக்கை இன்றி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் வீதிகள் மற்றும் அடுக்குமாடிக் கட்டடங்கள் சேதம் அடைந்திருப்பதோடு ஐவர் காணாமல்போயிருக்கும் நிலையில் நேற்றும் மீட்புப் பணிகள் இடம்பெற்றன.

லெபனானில் தொடரும் இஸ்ரேலின் தாக்குதல்கள் காரணமாக ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி இருப்பதோடு கணிசமானோர் அண்டை நாடான சிரியாவில் அடைக்கலம் பெற்றுள்ளனர். 2,100க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

## 42,126 பலஸ்தீனர்கள் பலி

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் நீடிக்கும் நிலையில் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக நீடிக்கும் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 42,126 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 98,117 பேர் காயமடைந்துள்ளனர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் தாக்குதல்களில் குறைந்தது 61 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 117 பேர் காயமடைந்ததாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று அறிவித்த நிலையிலேயே அங்கு உயிரிழப்பு மேலும் அதிகரித்துள்ளது.

குறிப்பாக மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் உள்ள வீடு ஒன்றின் மீதும் மகாசி அகதி முகாமில் உள்ள பொதுமக்களின் குழு ஒன்றின் மீதும் நேற்றுக் காலை நடத்திய தாக்குதல்களில் பெண் ஒருவர் உட்பட மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

இதில் மகாசி அகதி முகாமில் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் ஒருவர் காயமடைந்திருப்பதாக உள்ளூர் வட்டாரங்களை மேற்கோள் காட்டில் பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது. மறுபுறம் டெயர் அல் பலாஹ்வில் இடம்பெயர்ந்தவர்கள் அடைக்கலம் பெற்றிருந்த வீட்டின் மீது இடம்பெற்ற வான் தாக்குதலில் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்நிலையில் வடக்கு காசாவில் இஸ்ரேலின் படை நடவடிக்கை தொடர்வதோடு அங்குள்ள ஜபலியாக அகதி முகாம் இஸ்ரேலியப் படையின் முற்றுகையில் இருந்து வருகிறது. இந்த முற்றுகை பல மாதங்கள் நீடிக்கக் கூடும் என்றும் வடக்கு காசாவில் இருந்து மக்களை முற்றாக வெளியேற்றும் நடவடிக்கையில் இஸ்ரேல் இராணுவம் ஈடுபட்டிருப்பதாகவும் இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளது.

இந்தத் திட்டம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜியோரா ஐலாண்டால் வடிவமைக்கப்பட்டிருப்பதோடு வடக்கு காசாவில் உள்ள 400,000 குடியிருப்பாளர்களை அங்கிருந்து வெளியேற்றி



அந்தப் பகுதியை இராணுவ வலயமாக மாற்றுவதற்கு திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை காசாவின் சுகாதாரப் பராமரிப்பு முறையை அழிப்பதற்காக இஸ்ரேல் ஒருங்கிணைந்த முயற்சியை எடுத்ததாக ஐக்கிய நாட்டு நிறுவன விசாரணைக் குழு குறிப்பிட்டுள்ளது. அவை போர்க்குற்றங்களாகவும் மனிதநேயத்துக்கு எதிரான நடவடிக்கைகளாகவும் கருதப்படும் என்று அது கூறியது.

ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் மனித நேயத்துக்கான முன்னாள் உயர் ஆணையாளர் தலைமையில் அறிக்கை ஒன்று தயாராகியுள்ளது. இஸ்ரேல் வேண்டுமென்றே மருத்துவ அதிகாரிகள், வளாகங்கள் மீது விடாமல் தாக்குதல் நடத்தியிருப்பதாய் அறிக்கை குறிப்பிட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 12ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.